Registered as a News paper in Sri Lanka

விலை ரூபா: 8.00

# வலம்புரி
Valampurii

பக்கங்கள்: பத்து

சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 வைகாசி 28 சனிக்கிழமை (11.06.2005) தொலைபேசி 2223378, 2227644 ஒலி 174

வாழ்நாள் முழுவதும்
வளமுடன் வாழ
அண்ணா
ஜீவாகாரம்
உடனடியாக உண்ணககூடிய
நிலையில் உள்ள சத்துணவு
விபரங்களுக்கு
அண்ணா கோப்பிக் கடை
இல.4 நவீன சந்தை
யாழ்ப்பாணம்.

# பொதுக்கட்டமைப்பை வாபஸ் பெற 15-ம் திகதிவரை ஜே.வி.பி. காலக் கெடு

## தவறின் மறுநாள் அரசில் இருந்து விலகுமென எச்சரிக்கை

(நமது நிருபர்)

**விடுதலைப்புலிகளுடன் இணைந்து பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்தவும் அதில் கைச்சாத்திடவும் ஜனாதிபதி எடுத்துள்ள முடிவை எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் வாபஸ் பெறாவிட்டால் மறுநாள் தாம் அரசை விட்டு வெளியேறிவிடுவோம் என ஜே.வி.பி. அறிவித்துள்ளது.**

இலங்கை மன்றக்கல்லூரியின் கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டபோதே ஜே.வி.பி.தலைவர் சோமவன்ச அமரசிங்க இதனைத்தெரிவித்தார்.

உத்தேசப் பொதுக்கட்டமைப்பிற்கு தமது கட்சி தொடர்ச்சியாக எதிர்ப்பினைத் தெரிவித்து வருவதாகவும் ஆனால் ஜனாதிபதி அந்த எதிர்ப்புக்களை பொருட்படுத்தாது பொதுகட்டமைப்பு உடன்படிக்கையில் கைச்சாத்திட முடிபு செய்துள்ளதாகக் குறிப்பிட்ட ஜே.வி.பி.தலைவர் 15ஆம் திகதி நள்ளிரவு வரை ஜனாதிபதிக்கு காலஅவகாசம் வழங்கியுள்ளது.

அதற்குள் பொதுக்கட்டமைப்பை கைவிடுவதாக 'ஜனாதிபதி அறிவிக்காவிடில் ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பில் இருந்து கண்டிப்பாக ஜே.வி.பி.வெளியேறும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை கடந்த புதன் கிழமை ஜே.வி.பி.தலைவர்களை அழைத்து பிரதமர் மகிந்த ராஜபக்ஷ நீண்டநேரம் பேச்சு நடத்தியுள்ளார்.

அப்போது பிரதமரிடம் தமது நிலைப்பாட்டை தெளிவாக எடுத்துக்கூறிய ஜே.வி.பி. (10ஆம் பக்கம் பார்க்க)

## சோபித தேரரை கடத்த முயற்சி ஹெல உறுமய குற்றச்சாட்டு

பொதுக்கட்டமைப்புக்கு எதிர்ப்புத்தெரிவித்து கண்டி தலதாமாளிகையில் உண்ணாவிரதம் இருக்கும் ஓமல்பே சோபிததேரரை நேற்று அதிகாலை ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவினர் கடத்த முயற்சித்துள்ளதாக ஹெல உறுமய குற்றம் சாட்டியுள்ளது.

கண்டி தலதா மாளிகைப்பகுதியில் தேரர் உண்ணாவிரதம் இருக்கும் பகுதிக்கு அதிகாலை 2.30மணியளவில் சிவில் உடையில் இரகசியமாகச்சென்ற ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவைச்சேர்ந்த சிலர் தேரரை குண்டுக்கட்டாக தூக்கி கடத்த முயன்றுள்ளனர். தேரருக்கு அருகில் சென்ற இவர்கள் (10ஆம் பக்கம் பார்க்க)

## அலுவலக மாற்றம்

**அன்பு வாசகர்களே! விளம்பரதாரர்களே! வர்த்தகப்பெருமக்களே! உங்கள் அன்பிற்கும் நன்மதிப்பிற்கும் பாத்திரமான வலம்புரிப்பத்திரிகையின் அலுவலகம் 11.06.2005 இன்று முதல் பிறவுண் வீதி இரண்டாம் ஒழுங்கையில் உள்ள அலுவலகத்தில் (நீராவியடிப்பிள்ளையார் கோவிலுக்கு அருகில்) இயங்கும் என்பதை அறியத்தருகின்றோம்.**

**வலம்புரிக் குடும்பம்.**

# அரசைவிட்டு ஜே.வி.பி. வெளியேறினால் தமிழ் கூட்டமைப்புடன் ஆட்சி நடாத்துவேன்

## முஸ்லிம்களுடனான சந்திப்பில் ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

பொதுக்கட்டமைப்பு விடயத்தில் ஜே.வி.பி. ஒருபோதும் அரசை விட்டு விலகாது. அவ்வாறு வெளியேறினாலும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ஆதரவுடன் ஆட்சிநடத்துவேன் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

அரசில் அங்கம் வகிக்கும் முஸ்லிம் எம்.பிக்கள் நால்வரையும் நேற்று முன்தினம் சந்தித்தபோதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

பொதுக்கட்டமைப்பு தொடர்பில் வியாழன் அன்று ஜனாதிபதி முஸ்லிம் எம்.பிக்களுடன் பேச்சுநடத்தியிருந்தார். அதன்போது அவர் புலிகளுடன் இணைந்து செயற்பட இதுவே மிகச்சிறந்தசந்தர்ப்பம் எனவே இதனை இழக்கவிரும்பவில்லை என்று கூறியுள்ளார்.

இச் சந்திப்பில் முஸ்லிம்கள் பிரச்சினையை எம்.பிக்கள் ஜனாதிபதிக்கு எடுத்துக்கூறினர். இதனை புலிகளுடன் பேசித் தீர்த்து வைப்பதாக ஜனாதிபதி அவர்களிடம் உறுதியளித்துள்ளார். பொதுக்கட்டமைப்பில் கைச்சாத்திடுவதானால் எந்த பிரதிபலன் கிட்டினாலும் அதில் கைச்சாத்திட்டே தீருவேன் உத்தேசபொதுக்கட்ட (10ஆம் பக்கம் பார்க்க)

## எந்த ஒரு தேர்தலையும் எதிர்கொள்ள தயார் நிலையில் தேர்தல் திணைக்களம்

விரைவில் எந்தவொரு தேர்தல் வந்தாலும் அதனை எதிர்கொள்ள தயார் நிலையில் இருப்பதாக தேர்தல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வெகுவிரைவில் தேர்தல் ஒன்றுவரலாம் எனத்தகவல்கள் வெளியாகிவரும் நிலையில் அவ்வாறு எந்தவொரு தேர்தல்வந்தாலும் அதற்கு தாங்கள் தயாராக இருப்பதாக தேர்தல் ஆணையாளர் காரியாலயப்பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

அத்தேர்தல் 2004ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியலுக்கு அமையவே வாக்காளர் அட்டை விநியோகிக்கப்படவுள்ளது. அவ்வாக்காளர் பட்டியல் தேர்தல் ஆணையாளரால் உறுதிப்படுத்தப்பட்டிருப்பதாகவும் தற்போது அவை பிரதேசமட்டத்தில் தேர்தல்காரியாலயங்களுக்கு அனுப்பப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். (ச-4)

## பொதுக்கட்டமைப்பை எதிர்த்து பிக்குகள் நேற்று ஆர்ப்பாட்டம்

### பொலிஸார் கண்ணீர் புகைக்குண்டு வீச்சு

(கொழும்பு)

சுனாமியால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு பகுதிகளில் புனர்வாழ்வு நடவடிக்கைகளை மேற்கொள்ள உருவாக்கப்படும் பொதுக்கட்டமைப்பிற்கு எதிர்ப்புத்தெரிவித்து கொழும்பில் நேற்று இரண்டு இடங்களில் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

ஜாதிக ஹெல உறுமயக்கட்சியும் தேசியபிக்கு முன்னணியுமே இவ்எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடாத்தியுள்ளனர். ஜாதிய ஹெலஉறுமயக்கட்சி ஏற்பாடுசெய்திருந்த இவ்எதிர்ப்பு ஊர்வலம் கொழும்பு விகாரமாதேவி பூங்காவில் ஆரம்பமாகி கோட்டையை நோக்கிச்சென்றது.

'அதேவேளை தேசியபிக்கு முன்னணி ஏற்பாடுசெய்த ஆர்ப்பாட்டம் குஞ்சுப்பொரளையில் இருந்து ஆரம்பமாகி கொழும்புகோட் (10ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு ஒப்பந்தம் மூலம் புலிகளின் பலம் குறைவடையும்

### இந்திய வெளிவிவகார அமைச்சர் நட்வர்சிங்

(கொழும்பு)

இலங்கை இந்திய அரசுகளுக்கு இடையிலான பாதுகாப்பு ஒப்பந்தம் கைச்சாத்திடுவதன் மூலம் விடுதலைப்புலிகளின் விமானப்படை மற்றும் கடல்படை ஆகியவற்றின் பலம் குறைவடையும் என இந்தியவெளிவிவகார அமைச்சர் நட்வர்சிங் தெரிவித்துள்ளார்.

நேற்றுக் கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இவ்வொப்பந்தம் குறித்து இருநாடுகளுக்கும் இடையே இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளின் மூலம் ஒருசில விடயங்கள் தவிர ஏனைய விடயங்கள் இருதரப்பினராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

(10ஆம் பக்கம் பார்க்க)

EXPOAIR
your friend in the skies...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்
021 - 222 3891, 222 6297, 0777-2349999,
011-2372952/3, 011-2360290/1
e.mail:- jaffna@expoavi.com, reservations@expoavi.com.

எக்ஸ்போ ஏயார்
வானத்தில் உங்கள் நண்பன்...

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# சேது சமுத்திரத் திட்டம்

சேதுசமுத்திர கால்வாய் திட்டத்தை ரூ.2427.40 கோடி மதிப்பீட்டில் நிறைவேற்ற மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.


இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் தலைமையில் நடைபெற்ற மத்திய அமைச்சரவையின் பொருளாதார விவகாரக்குழு இதற்கான அனுமதியை வழங்கியுள்ளது.

இதன்மூலம் 145 ஆண்டுகளாக கிடப்பில் இருந்த சேதுசமுத்திரத் திட்டம் நடைமுறைக்கு வரவுள்ளது. அடுத்த 180 வாரங்களில் இத்திட்டம் நிறைவேறும்.

இதுகுறித்து மத்திய நிதி அமைச்சர் ப.சிதம்பரம் கூறியதாவது:

தமிழர்களின் ஒன்றரை நூற்றாண்டுக் கனவான சேதுசமுத்திரத் திட்டம் ரூ.2233 கோடி மூலதன செலவில் நிறைவேற்றப்படும்.

நிதிசெலவு உட்பட இத்திட்டத்திற்கு மொத்தம் ரூ.2427.40 கோடி செலவிடப்படும். மன்னார் வளைகுடாவையும், பாக்.ஜலசந்தியையும் இணைக்கும் இத்திட்டம் மூன்றரை ஆண்டுகளில் முழுமையாக நிறைவேற்றப்படும்.




தற்போது கப்பல் செல்லும் வழியினையும், சேது சமுத்திர திட்டம் அமைந்த பின்னர் கப்பல் செல்லும் வழியையும் படத்தில் காணலாம்.

உடனடியாக இத்திட்டத்தை துவக்குவதற்காக பாக்.ஜலசந்தி பகுதியை ஆழப்படுத்தும் பணிகளை மேற்கொள்ளும் பணி பொதுத்துறை நிறுவனமான இந்திய அகழ்வுப்பணி நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்நிறுவனம் வங்காள விரிகுடாவை ஒட்டியுள்ள பாக்.ஜலசந்தி பகுதியில் ஒரு கோடியே 20 இலட்சம் முதல் ஒரு கோடியே 30 இலட்சம் கனமீற்றர் வரையிலான மணல் உள்ளிட்ட பொருட்களை அகற்றி கால்வாயை ஆழப்படுத்தும்.

இத்திட்டத்திற்கான நிதி ஆதாரங்களைத் திரட்டுவதற்காக 'சேது சமுத்திர நிறுவனம்' ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தை நிறைவேற்றும் பணியை தூத்துக்குடி துறைமுக பொறுப்புக்கழகம் ஏற்றுள்ளது.

சேதுசமுத்திர நிறுவனத்தில் ரூ.495 கோடி மதிப்பிலான பங்குகளை இந்திய அரசு பெற்றிருக்கும். தூத்துக்குடி, சென்னை, விசாகப்பட்டினம், பாரதீப் ஆகிய துறைமுக பொறுப்புக் கழகங்களும், எண்ணூர் துறைமுக நிறுவனமும் இதில் பங்குதாரர்களாக உள்ளன. இந்திய கப்பல் கழகமும், இந்திய அகழ்வுப்பணி கழகமும் பங்கேற்றுள்ள சேதுசமுத்திர நிறுவனத்தின் ரூ.226 கோடி பங்குகள் தனியார் மூலம் திரட்டப்படும்.

இவ்வாறு நிதி அமைச்சர் ப.சிதம்பரம் கூறினார்.

சேதுசமுத்திர திட்டம் குறித்து மத்திய கப்பல் போக்குவரத்து துறை அமைச்சர் டி.ஆர்.பாலு கூறியதாவது:

சேதுசமுத்திர கால்வாயின் மொத்த நீளம் 167 கிலோமீற்றர். இதில், 89 கிலோ மீற்றர் அளவிற்கு மட்டுமே அகழ்வுப் பணி மேற்கொள்ளப்படும். எஞ்சிய தூரத்திற்கு கடலில் போதுமான ஆழம் இருப்பதால அப்பகுதிகளில் அகழ்வுப்பணி மேற்கொள்ளப்படமாட்டாது.

இக்கால்வாயின் ஆழம் 12 மீற்றராகவும், அகலம் 300 மீற்றராகவும் இருக்கும். இக்கால்வாயின் இருவழிக் கப்பல் போக்குவரத்து அனுமதிக்கப்படும். 2008-09 ஆம் ஆண்டில் இக்கால்வாய் செயல்படத் துவங்கும்.

மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகம் விதித்துள்ள சுற்றுச்சுழல் பாதுகாப்பு சம்பந்தமான அனைத்து நிபந்தனைகளும் முழுமையாக நிறைவேற்றப்படும். மீனவர்களுக்கு எவ்வித பாதிப்பும் நேராதவாறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

சேதுசமுத்திரக் கால்வாய் திட்டத்தின் மூலம் இந்தியாவின் கிழக்கு மற்றும் மேற்கு கடல் பகுதிகளுக்கு இடையேயான கப்பல் போக்குவரத்தில் கணிசமான பயணநேரம் குறைவதோடு, பயணச் செலவும் பெருமளவு குறையும. இந்தியாவின் பாதுகாப்பிற்கு இத்திட்டத்தின் மூலம் பெரும் பலன்கள் விளையும்.

தமிழ்நாட்டின் தென் மாவட்டங்களில் குறிப்பாக, பின்தங்கிய பகுதிகளில் தொழில் வளர்ச்சியும, கட்டமைப்பு வளர்ச்சியும் இத்திட்டத்தின் மூலம் துரிதப்படுத்தபபடும். சேதுசமுத்திர திட்டத்தின் வாயிலாக கடலோர மாவட்டங்களில் வேலை வாய்ப்புகள் பெருமளவில் பெருகும்.

அதிநவீன தொழில்நுட்ப சாதனங்களைப் பயன்படுத்தி சுற்றுச்சுழலுக்கு மாசு ஏறபடாதவாறு தொடர்ந்து கண்காணிக்கப்படும. இவ்வாறு டி.ஆர்.பாலு தெரிவித்தார்.

சேதுசமுத்திர கால்வாய் அமைப்பதற்கு 1860ஆம் ஆண்டிலிருந்து பல்வேறு திட்டங்கள் வடிவமைக்கப்பட்டன. இந்திய சுதந்திரத்திற்கு முந்தைய ஆண்டுகளில் ஒன்பது திட்டங்கள் உருவாக்கப்பட்டன. நாடு சுதந்திரம் பெற்ற பின் சேதுசமுத்திரத் திட்டத்தை நிறைவேற்ற தொடர்ந்து முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

## தொழில்நுட்ப அம்சங்கள்

- மன்னார் வளைகுடாவையும், பாக் விரிகுடாவையும் இணைக்கும் சேது சமுத்திரக் கால்வாய் மொத்தம் 167 கிலோ மீற்றர் நீளம் கொண்டதாகும்.
- பாக் விரிகுடா பகுதியில் போதுமான ஆழம் இருப்பதால் அங்கு 78 கிலோமீற்றர் நளத்திற்கு ஆழப்படுத்தும் பணி மேற்கொள்ளப்பட மாட்டாது.
- ஆதம் பாலம் அருகே 35கிலோ மீற்றர் நீளத்திற்கும் பாக்குநீரிணை பகுதியில் 54 கிலோ மீற்றர் நீளத்திற்கு மட்டுமே ஆழபபடுத்தும் பணி மேற்கொள்ளபபடும்.
- சேதுசமுத்திர கால்வாய் 12 மீற்றர் ஆழம் கொண்டதாக அமையும்.
- கால்வாய் அகலம் 300 மீற்றர் கொணடதாக இருக்கும்.
- 10 மீற்றர் மிதவை ஆழம் கொண்ட கபபல்கள் இக்கால்வர்யில் அனுமதிக்கப்படும்.
- சேதுசமுத்திர கால்வாய் இருவழிப் பாதையாக செயல்படும்.
- இதன்படி 20,000 தொன் எடை கொண்ட அனைத்து கப்பல்களும், 30,000 தொன் எடை கொண்ட கப்பல்களில் 75 சதவிகித கப்பல்களும, 40,000 தொன் எடை கொண்ட கப்பல்களில 10 சதவிகித கப்பலகளும், 50,000 தொன் எடை கொண்ட இராட்சத கப்பல்களில் 5 சதவிகித கப்பல்களும் சேதுசமுத்திரக் கால்வாயைப் பயன்படுத்தலாம். அனைத்து காலி கப்பல்களும் இக்கால்வாயில் அனுமதிக்கப்படும்.
- பனாமா மற்றும் சூயஸ் கால்வாய்களைப் பயன்படுத்தும் கப்பல்கள் அதற்குரிய எடை அளவில் வடிவமைக்கபபடுவதைப போலவே சேதுசமுத்திர கால்வாயைப் பயனபடுத்தும் கப்பல்கள் 'சேது அளவு' கப்பல்களாக வடிவமைக்கப்பட வாய்ப்புகள் ஏற்படும்.
- இக்கால்வாயில் செல்லும் கப்பல்கள் 8 கடல் மைல் வேகத்தில் செல்ல அனுமதிக்கப்படும்.
- பனாமா கால்வாயைப் போலவே சேது சமுத்திரக் கால்வாயில் குறைந்தபட்ச பார்வை தூரம் 2.5 கிலோ மீற்றராக அமையும்.
- இரண்டு கப்பல்களுக்கிடையே கடந்து செல்ல ஆகும் நேரம் 10 நிமிடமாக இருக்கும்.
- 33 மீற்றர் அகலமும், 215 மீற்றர் நீளமும கொண்ட கப்பல்கள் இக்கால்வாயைப் பயன்படுத்லாம்.
- மொத்தம் 82.5 மில்லியன் கன மீற்றர் அளவிற்கு இக்கால்வாய் பணிக்காக தூர்வாரப்படும்.
- கால்வாயை ஆழப்படுத்துகையில் தோண்டப்படும் மணல் உள்ளிட்ட பொருட்கள் கடல் பகுதியில் கரையில் இருந்து வெகு தொலைவில் 25 இலிருந்து 30 மீற்றர் ஆழத்தில் கொட்டப்படும்.
- சேது கால்வாயைப் பயன்படுத்தும் கப்பல்களை வழிநடத்த நான்கு கப்பல் போக்குவரத்து நிர்வாக நிலையங்கள் அமைக்கப்படும். இவற்றில் இரண்டு இராமேஸ்வரத்திலும், கோடியக்கரையிலும் அமைக்கப்படும்.
- இந்நிலையங்களில் அதிநவீன தகவல் பரிமாற்ற சாதனங்களும், போக்குவரத்து கண்காணிப்பு உபகரணங்களும் அமைந்திருக்கும்.
- சேதுசமுதத்திர கால்வாய் பகுதியில் கப்பல்களை வழிநடத்த இழுவைப் படகுகள், நிலைப்படுத்தும் படகுகள், ரோந்துப் படகுகள் உள்ளிட்டவை பணியில் ஈடுபடுத்தப்படும்.

## சேது சமுத்திர திட்டப் பயன்கள்

- சேது சமுத்திர கால்வாயைப் பயன்படுத்துவதன் மூலம் இந்தியாவின் கிழக்கு மற்றும் மேற்கு கடல் பகுதிகளுக்கு இடையேயான கப்பல் போக்குவரத்து தூரம் சுமார் 424 கடல மைல் அளவுக்கு குறையும். இதன்மூலம் கப்பல்களின் பயணநேரம் 30 மணி நேரம் அளவிற்கு குறையும் வாய்ப்புள்ளது.
- இதன்மூலம் கணிசமான எாிபொருள் சேமிப்பும், அந்நியச் செலாவணி சேமிப்பும் ஏற்படும்.
- கப்பல் வாடகை கட்டணத்தில் கணிசமான சேமிப்பு ஏற்படும்.
- பயணநேரம் குறைவதால் கபபல்கள் கூடுதல் பயணங்களை மேற்கொள்வதன் மூலம் கூடுதல் சரக்குகளை கையாள இயலும்.
- தென் மாநிலங்களில் கிழக்கு கடற்கரை துறைமுகங்களில் ஒன்று சரக்கு பெட்டக போக்குவரத்திற்கென ஒருங்கிணைப்புத் துறைமுகமாக மேம்படுத்தப்படும்.
- தூத்துக்குடி துறைமுகம் பெருமளவில் வளர்ச்சி அடையும்.
- இராமேஸ்வரத்தில் மீன்பிடித துறைமுகம் அனைத்து வசதிகளுடன் மேம்படுத்தப்படும்.
- கடற்படை மற்றும் கடலோர காவல்படை கப்பல்கள் கிழக்கு மண்டலத்தில் இருந்து மேற்கு மண்டலத்திற்கு அதி விரைவில் செல்ல இயலும். இதன்மூலம் இந்திய படைத் திறன் பெருமளவில் மேம்படுத்தப்படும்.
- இந்தியாவிற்கும், இலங்கைக்கும் இடையே கண்காணிப்பு வலுப்படுத்தப்படும்.
- இராமநாதபுரம, நாகப்படடினம், தூத்துக்குடி கட்டமைப்பு வளர்ச்சி பெருகும்.
- தமிழகத்தின் கடலோர மாவட்டங்களில தொழில் வளர்ச்சியும், வேலைவாய்ப்பும் மேம்படும்.
- எண்ணெய் சுத்திகரிப்பு மற்றும் அனல் மின்நிலையங்கள் பயன்பெறும்.
- மீன்பிடித் தொழில் உள்ளிட்ட கடல்சார் தொழில்கள் ஊக்கமடையும்.
- இராமேஸ்வரத்திலும், சேதுசமுத்திர கால்வாய் பகுதியில் மேலும் இரு இடங்களிலும் மீன்பிடித் துறைமுகங்கள் அனைத்து வசதிகளுடன் உருவாக்கப்படும.

## ஓர் நோக்கு

- நெடுஞ்சாலைகள், ரயில் பாதை, குடிநீர் வசதி, மின் வசதி ஆகியவை மேம்படுத்தப்படும்.
- சேதுசமுத்திர கால்வாய் திட்டப் பகுதி மக்களின் வாழ்க்கைத்தரம் உயரும்.
- கடலோர மாவட்டங்களில் பல்வேறு துணை தொழிற்சாலைகள் உயரும்.
- வர்த்தகம் மற்றும் ஏற்றுமதி பெருமளவில் ஊக்குவிக்கப்படும்.
- இத்திட்டத்திற்கான உள்நாட்டு மற்றும் அயல்நாட்டு கடன்களுக்கு இந்திய அரசு உத்தரவாதம் வழங்கும்.
- 2009-10ஆம் ஆண்டிலிருந்து இக் கால்வாய் செயல்படும் முதல் ஒன்பது ஆண்டுகளுக்கு வருவாய் இழப்பை ஈடுகட்ட இந்திய அரசு வட்டியில்லாத் திட்டம்சாரா கடனுதவியாக ரூ.390.05 கோடி வழங்க கொள்கை அளவில ஒப்புக்கொண்டுள்ளது. இதேபோல இத்திட்டத்தில் பங்கேற்கும் துறைமுகங்களும், பொதுத்துறை நிறுவனங்களும் ரூ.374.75 கோடி வழங்கும்.
- இத்திட்டத்திற்காக பெறப்படும் கடன் தொகையில் சுமார் 50 சதவிகிதம் இந்திய பணமாகவும், மீதித் தொகை அன்னிய செலாவணியாகவும் இருக்கும்.
- சேது சமுத்திர திட்டத்தின் மூலம் வரி விதிப்பிற்கு முந்தைய வருவாய் விகிதம் 10.2 சதவிகிதமாகவும், வரி விதிப்பிற்கு பிந்தைய வருவாய் விகிதம் 9.1 சதவிகிதமாகவும் இருக்கும்.
- இத்திட்டத்தின் பொருளாதார உள்வருவாய் விகிதம் 16.9 சதவிகிதமாக இருக்கும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. வருவாய் விகிதம் 16.9 சதவிகிதமாக இருக்கும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

(ந)

## சேதுசமுத்திரத் திட்டம் நிதி அம்சங்கள்

- சேதுசமுத்திரக் கால்வாய் திட்டத்திற்கு மொத்தம் ரூ.2427.40 கோடி செலவிடப்படும்.
- இத்திட்டத்தின் மூலதனச் செலவு ரூ.2233 கோடியாகவும், கட்டுமானத்தின்போது வட்டி உள்ளிட்ட நிதி ஆதாரச் செலவு ரூ.194.40 கோடியாகவும் இருக்கும்.

### திட்டமதிப்பீடு

| பணி | செலவு (ரூ.கோடியில்) |
|---|---|
| துவக்க நிலை செலவுகள் | 10.0 |
| நிலம் கையகப்படுத்தல்/நிர்வாகச்செலவுகள் | 5.0 |
| ஆழப்படுத்துதல் | 1719.6 |
| வழிநடத்தும் சாதனங்கள் | 10.9 |
| இழுவை படகுகள் | 157.6 |
| கண்காணிப்பு நிலையங்கள் | 65.9 |
| கட்டுமானப் பணிகள் | 144.0 |
| ஆலோசனை மற்றும் மேலாண்மை | 20.0 |
| பிற செலவுகள் | 100.0 |
| மொத்தம் | 2233.0 |

- இத் திட்டத்திற்கு பங்குகள் மூலமாக ரூ.971 கோடியும், கடன்கள் மூலமாக ரூ.1456.40 கோடியும் திரட்டப்படும். இத்திட்டத்திற்கான கடன், பங்கு விகிதம் 1.5:1 ஆக இருக்கும்.


### மூலதன பங்குகள் வாயிலாக திரட்டப்படும் நிதி

| நிறுவனம் | பங்குத் தொகை (ரூ.கோடியில்) |
|---|---|
| இந்திய அரசு | 495 |
| தூத்துக்குடி துறைமுகப் பொறுப்புக் கழகம் | 50 |
| இந்தியக் கப்பல் கழகம் | 50 |
| இந்திய அகழ்வு பணி கழகம் | 30 |
| சென்னை துறைமுக பொறுப்புக் கழகம் | 30 |
| எண்ணூர் துறைமுக நிறுவனம் | 30 |
| விசாகப்பட்டினம் துறைமுக பொறுப்புக் கழகம் | 30 |
| பாரதீப் துறைமுக பொறுப்புக்கழகம் | 30 |
| தனியார் பங்குகள் | 226 |
| மொத்தம் | 971 |

# சிறுவர் அரங்கம்

## கண்டு பிடியுங்கள்

சிறுவர்களே! கீழே தரப்பட்டுள்ள இவ்விரு படங்களுக்கிடையே 5 வித்தியாசங்கள் உள்ளன. அவற்றைச் சரியாகக் கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்.



## உங்களுக்குத் தெரியுமா?

* 70 வயதான மனிதன் தன் வாழ்நாளில் சராசரியாக 70,000 மைல்கள் நடந்திருப்பான். இது பூமியை இரண்டரை முறை சுற்றியதற்குச் சமம்.

*கறையான் பூச்சி நாள் ஒன்றுக்கு 86 ஆயிரம் முட்டைகள் இடுகின்றது.

* ஒரு ஏக்கர் பரப்பில் உள்ள மரங்கள் நான்கு தொன் ஒக்ஷிசன் வாயுவை உற்பத்தி செய்கிறது. இது 18 பேர் ஒரு வருடம் உயிர்வாழப் போதுமானது ஆகும்.

* ஒருவர் தும்மும்போது 2000 முதல் 5000 நீர் அணுத் துளிகள் வெடித்துச் சிதறுகிறது.

* சீனமொழியில் 'ஏ' என்ற எழுத்து 84 விதமான அர்த்தங்களைக் குறிக்கிறது.

* கொரில்லாக் குரங்குகள் மரங்களின் மீது கூடு கட்டி வசிக்கும்.

* ஒருபோதும் மலராத் பூ அத்திப்பூ.

தி.யதுஸா.



க.லிதர்சன்,
யா/சிதம்பராக் கல்லூரி.

## நாலு வயது வாத்தியார்



நானே நல்ல வாத்தியார்
ஆனால் வயது நாலுதான்

கிளுவை எனது மாணவன்
புளியும் எனது மாணவன்

கப்பும் எனது மாணவன்
கொப்பும் எனது மாணவன்

பாடஞ் சொல்வேன் சொல்லார்கள்!
மூடர் என்று திட்டுவேன்

தடிஎ டுப்பேன் கையிலே!
அடிகொ டுப்பேன் முதுகிலே!

நானே நல்ல வாத்தியார்
ஆனால் வயது நாலுதான்.

ச.வே.பஞ்சாட்சரம்

## நல்ல பாம்பு



புற்கள் பற்றைகள் நிறைந்த நிலப் பகுதியைக் கடந்து ஒரு நாகபாப்புக் குட்டி ஓடிக் கொண்டிருந்தது. அன்று அதன் ஓட்டம் வழமைபோல இல்லை. பதற்றம் அடைந்திருந்தது. அது வழியில் எதிர்ப்பட்ட அதன் உறவினரான இன்னுமொரு நாகபாம்பிடம் நடந்ததைக் கூறியது.

"நான் என்பாட்டில் சென்று கொண்டிருந்தபோது ஒரு மனிதன் என்னை அடித்துக் கொல்ல வந்தான்.

தான் தோளில் கொண்டு வந்த மண்வெட்டியினால் ஓங்கினான். அதற்கு முன் நான் அவனைக் கடித்துவிட்டு ஓடி வந்துவிட்டேன். அவன் செத்துப்போனான்.

அவனது வீட்டில் அவனது மனைவி பிள்ளைகளுடன் ஊரவர்கள் கூடி அழுது புலம்புகிறார்கள். பாவமாகவும் இருக்கிறது. பரிதாபமாகவும் இருக்கிறது. நான் ஏதோ பிழை செய்துவிட்டேன் போல் தெரிகிறது. எனக்குப் பயமாக இருக்கிறது" இப்படிக்கூறிய போது அது பயத்தினால் நடுங்கியது தெரிந்தது.

உறவினரான பாம்பு ஆறுதலும் ஆலோசனையும் கூறியது. "இந்தா பார் நீ செய்தது முற்றிலும் சரியான வேலைதான். மனிதன் தன்னிடம் ஒரு வலிமை இருபபதை வைத்துக் கொண்டு பிற உயிரினங்களைக் கொடுமைப்படுத்தவும் கொலை செய்யவும் அனுமதிக்கலாமா? இந்தப் பூமியில் பிறந்த ஒவ்வொரு உயிரினத்திற்கும் இந்தப் பூமியில் வாழும் உரிமையுண்டு. அந்த உரிமையை நிலை நிறுத்துவதற்கு இயற்கையாகவே அதற்கொரு தற்பாதுகாபபு முறையும் உண்டு.

பாம்புக்கு விஷம் அந்தத் தற்பாதுகாப்பு ஏற்பாடுதான். அது இறைவன் கொடுத்தது. அதனால் தன்னைக் கொல்ல வந்த அகங்காரம் பிடித்த மனிதனைக் கடித்தது சரிதான்" என்று கூறி தேற்றியது அந்தப் பாம்பு.

மனிதனைக் கடித்த பாம்புக் குட்டிக்கு ஓரளவு திருப்தியாக இருந்தது. தனது புற்றுக்குச் சென்று தனது தாயாரிடம் நடந்ததைச் சொல்லியது. தாயும் கூட கடித்தது சரிதான் என்றே கூறியது.

ஆனாலும் மேலதிகமாக ஒரு அறிவுரையும் கூறியது அந்தத் தாய்ப்பாம்பு.

"உன் உயிரைப் பாதுகாக்க உனக்கு உரிமையுண்டுதான். ஆனால் பெட்டிஷக்காரரைக் கடித்துப் போடாதை. உனது அப்பா இறந்துபோன கதை தெரியும் தானே" என்று தாய்ப் பாம்பு மேலதிகமாக ஒரு எச்சரிக்கையும் செய்தது. குட்டிப் பாம்புக்கு மேலும் உற்சாகம் பிறந்தது.

"அப்பா எப்படியம்மா செத்தவர்? நீங்கள் இதுவரை எனக்குச் சொல்லவில்லையே?" என்று பெரும் ஆர்வத்துடன் கேட்டது. தன்னுயிருக்கு ஆபத்து வருவதை உணர்ந்து கொண்டுதான் அவர் பெட்டிஷக்காரர் சின்னத்துரைக்கும் கடிததார். ஆனால் விபரீதமாகப் போய்விட்டது. ஒரு நாக பாம்பான அவருக்கே சின்னத்துரையின்ரை நஞ்சு ஏறிவிட்டது. அவர் எதிர்பாராத விதமாகச் சாகவேண்டி வந்தது" என்று விளக்கியது அம்மா பாம்பு.

குட்டிப்பாம்புக்கு சங்கடமாகப் போய்விட்டது. பெட்டிஷக்காரரை எப்படி இனங்கண்டுபிடிப்பது என்பதுதான் அதன் சங்கடம் என்று புரிந்துகொண்ட அம்மா பாம்பு சற்று இனங்காட்டி வைத்தது.

மனிதர்களுக்குள்ளும் சில விஷமிகள் இருக்கிறார்கள். எல்லோரையும் போல இருப்பார்கள். ஆனால் துரோகிகளுடன கூட்டு வைத்துக்கொண்டு இரகசியத் தகவல்களை வழங்குவார்கள். அவர்களை இனங்காண்பது இலகுவானதல்ல. அதனால்தான் உன் அப்பாவுக்கு அகால மரணம் ஏற்பட்டது. நீ கவனமாக இருக்க வேண்டும்" என்று விளக்கி வைத்தது.

நாக பாம்பின் நஞ்சையும் விட அதிகம் நஞ்சு வைத்திருக்கும் அந்த மனிதனைக் காண வேண்டும்போல் குட்டிப் பாம்புக்கு ஆவல் பிறக்கவே அது பொறுமையின்றி புறப்பட்டுச் சென்றது.

தனது தந்தையின் மரணத்துக்குக் காரணமாயிருந்த அவனை அது தேடிக்கொண்டே திரிந்தது.

## சிறிய நாடு பெரிய அரண்மனை!

உலக கத்தோலிக்கர்களின் தலைமை இடமாகிய வத்திக்கான் நாடுதான் உலகில் மிகச் சிறிய நாடு. இதன் பரப்பளவு 0.17 சதுர மைல். இங்குள்ள வத்திக்கான் அரண்மனைதான் உலகிலேயே மிகப்பெரிய அரண்மனை. 1929இல் வத்திக்கான் இத்தாலியிலிருந்து பிரிந்து தனி நாடானது.

வத்திக்கான் நகரில் 3 மொழிகள் புழக்கத்தில் உள்ளன. வாய்ப்பேச்சுக்கு இத்தாலிய மொழி. சடங்குகளுக்கு இலத்தீன் மொழி. வெளிநாடுகளுக்கு, கடித தொடர்புகளுக்கு பிரெஞ்சு மொழி.

இந்த நாட்டிற்கென தனிக்கொடி, தனிப்படை, தனி அஞ்சல் துறை, வானொலி நிலையம், தொலைபேசி நிலையம், ரயில் நிலையம் அனைத்தும் உண்டு. வருவாய்க்கு வழி செய்யும் வரி எதுவும் கிடையாது. உலகெங்கிலும் உள்ள கத்தோலிக்கக் கிறிஸ்தவ மக்கள் அளிக்கும் காணிக்கையால்தான் இதன் பணிகள் நடைபெறுகின்றன.

## விடுகதைகள்

*வானத்திலே ஒரு கல், பூமியில் ஒரு கல், அரிசியில் ஒரு கல், தண்ணீரில் ஒரு கல், வெற்றிலையில் ஒரு கல் இவை என்ன? (கருக்கல், வழுக்கல், புழுங்கல், கலங்கல், அழுகல்).

*வாயிலே தோன்றி வாயிலே மறையும் பூ என்ன பூ? (சிரிப்பு).

*வாசலில் வண்ணப்பூ வரிவரியாக அழகுப்பூ தினந்தோறும் வேறு பூ தெளிவாய்த் தோன்றும் பூ. அது என்ன? (கோலம்).

*வாயில்லாதவனுக்கு உடம்பெல்லாம் பற்கள். அது என்ன? (சீப்பு)

*வாழ்நாள் எல்லாம் வாயைத் திறந்திருக்கும். அது என்ன? (கிணறு)

*வித்தில்லாமல் விளைவது என்ன? வெட்டாமல் சாயுதே அது என்ன? (மூங்கில்)

*விதையின்றி முளைக்கும் வேர் இன்றி வளரும் அது என்ன? (கொம்பு)

ந.பவித்திரா, உடுவில்.

# இன்று ஒரு தகவல்

## மனிதனும் பொம்மையும்

"இந்த உலகத்தில் எப்படி வாழ்வது என்று தெரியவில்லை சார்! உங்களுக்கு ஏதாவது வழி தெரிந்தால் கூறுங்களேன்" எனறு மிகவும் சுலபமாகக் கேட்டுவிட்டார் ஒருவர். வழிகூறுங்கள் என்று கேட்கிறாரே... இது என்ன வடக்கே போ, தெற்கே போ என்று கூறும் சமாச்சாரமா?

நான் யோசித்தேன்... சரி என்னுடன் வாருங்கள் என்று சொல்லி அவரை ஒரு தேவாலயத்திற்கு அழைத்துச் சென்றேன். அங்கே ஒரு பாதர் மக்களுக்கு நல்ல வழிகளைச் சொல்லிக் கொண்டிருந்தார். அவர் சொன்ன ஒரு சிறிய கதையில் இவர் என்னிடம் கேட்ட கேள்விக்குப் பதில் இருந்தது. இதுதான் சார் உங்கள் கேள்விக்கு விளக்கம்... என்னை விட்டுவிடுங்கள் என்று கூறி அவரிடமிருந்து தப்பித்தேன்.

இந்த உலகத்தில் எப்படி வாழ்வது? என்ற கேள்விக்கு எங்களுக்கு அங்கே கிடைத்த விளக்கத்தை இப்போது உங்களிடம் கூறுகிறேன். ஒரு ஊரில் ஒரு பெரியவர் இருந்தாராம். அவர் மக்களுக்கு நல்ல நல்ல வழிகளையெல்லாம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தாராம். எல்லோரையும் கூப்பிட்டு ஒரு இடத்தில் உட்கார வைத்து சில செயல் விளக்கம் கொடுப்பாராம்.

ஒருநாள் அப்படித்தான் ஒரு கூட்டத்தில் அவர் பேசிக் கொண்டிருந்தார். அவருக்கு எதிரில் மேசை மீது மூன்று கண்ணாடிப் பாத்திரம்.அதில் சுத்தமான தண்ணீர் மிகவும் தெளிவாக இருக்கிறது. அந்த மேசையின் இன்னொரு பக்கத்தில் மூன்று மனிதப் பொம்மைகள். மூன்று பொம்மையும் மூன்று மனித உருவம் தான். இருந்தாலும் அதில் ஒரு வித்தியாசம்.அது என்னவென்றால் ஒரு பொம்மை களிமண்ணால் செய்தது. ஒரு பொம்மை பஞ்சினால் செய்தது. இன்னுமொன்று சர்க்கரையால் செய்தது. உருவம் ஓரேமாதிரித் தான்... இருந்தாலும் அதனுள்ளே இருப்பவை வேறுமாதிரி.

இப்போது அந்தப் பெரியவர் என்ன செய்தார். முதலில் களிமண் பொம்மையைக் கையில் எடுத்தார். ஒரு கண்ணாடிப் பாத்திரத்தில் அதைப் போட்டார். அதன்பின் பஞ்சுப் பொம்மையை எடுத்து ஒரு பாத்திரத்தில் போட்டார். அதன்பின் சர்க்கரைப் பொம்மையை எடுத்து இன்னொரு பாத்திரத்தில் போட்டார். ஆக மூன்று பொம்மையையும் எடுத்து மூன்று பாத்திரத்திலும் உள்ள தெளிவான தண்ணீரில் போட்டுவிட்டார்.

எதிரில் உட்கார்ந்திருந்த மக்களைப் பார்த்து " இப்போது இதை எலலோரும் நன்கு கவனியுங்கள்" என்றார். கவனித்தார்கள். "என்ன நடக்கிறது இப்போது?" என்று கேட்டார். களிமண் பொம்மையைப் போட்டாரே அந்தப் பொம்மை தண்ணீரில் கரைந்தது. தண்ணீர் முழுவதும் சேறாகிவிட்டது.பஞ்சுப் பொம்மையைப் போட்டாரே... அந்தப் பொம்மை பாத்திரத்தில் உள்ள நீர் முழுவதையும் தனக்குள் இழுத்துக்கொண்டது. சர்க்கரைப் பொம்மையைப் போட்டாரே அங்கே பொம்மை தண்ணீல் கரைந்து தண்ணீரோடு தண்ணீராகவே ஆகிவிட்டது.

இந்த மூன்று பாத்திரங்களையும் மக்களிடம் காட்டி அந்தப் பெரியவர் விளக்கமளித்தார். "இப்போது மூன்று பொம்மை பார்த்தீர்களே இந்த மூன்றும் மூன்று வகை மனிதர்களுக்கு உதாரணம். களிமண் பொம்மை மாதிரி உள்ள மனிதர்கள் இந்த சமூகம் என்ற தண்ணீரில் கலக்கும்போது அவர்களும் கரைந்து விடுவார்கள். சமூகத்தையும் கலக்கி சேறாக்கி விடுவார்கள்.

பஞ்சுப் பொம்மை மாதிரி உள்ளவர்கள் சுயநலவாதிகள். சுற்றியுள்ளவற்றை தனக்கு உபயோகப்படுத்த எண்ணுபவர்கள். சர்க்கரைப் பொம்மை மாதிரி உள்ளவர்கள் சமூகத்திற்காகத் தன்னையே கரைத்துக் கொள்ளத் தயாராக இருப்பவர்கள். இவர்களால் சமூகம் முழுவதும் இனிப்பாகிறது.

ஆக இந்த உலகில் எப்படி வாழ வேண்டும் என்று கேட்டால் சர்க்கரைப் பொம்மை மாதிரி வாழவேண்டும்.அதுதான் அந்தப் பெரியவர் நமக்குக் கூறும் விளக்கம். இதுபோல் நான் ஒரு செயல் விளக்கம் செய்தேன்.

ஒருநாள் விடியற்காலை ஒரு நண்பர் வீட்டுக்குப் போனேன். நடைப்பயிற்சி செய்யும் வழியில் அவரது வீடு. அதனால் அவ்வப்போது போவது வழக்கம். அந்த நேரம் அவர் தேநீர் குடித்துக் கொண்டிருந்தார். என்னைப் பார்த்ததும் எனக்கும் தேநீர் வந்தது வழக்கம்போல். பக்கத்தில் சீனியைத் தனியாக வைத்திருந்தார். நான் ஒரு ஸ்பூன் சீனியை எடுத்துத் தேநீரில் போட்டுக் கலக்கினேன். சீனி கரைந்துவிட்டது. உடனே பேச ஆரம்பித்தேன்.

"பாருங்கள் சார்... ஒரு ஸ்பூன் சீனிதான். இருந்தாலும் அது ஒரு கப் தேநீரில் தன்னைக் கரைத்துத் தியாகம் செய்து கொண்டது.தேநீர் முழுவதும் இனிப்பாகவும் ஆக்கிவிட்டது! இதிலிருந்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?" என்று கேட்டேன். அவர் நிமிர்ந்து என்னைப் பார்த்தார் "இனிமேல் நீங்கள் என் வீட்டுக்கு வந்து சேருவதற்குள் தேநீரைக் குடித்து முடித்து விட வேண்டும் என்று நினைக்கிறேன்" என்றார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# மல்வத்தை மகாநாயக்க தேரர் தலையிட்டுத் தடுக்க வேண்டும்

## பிக்குகள் முன்னணி வேண்டுகோள்

ஜனாதிபதியால் உருவாக்கப்படவிருக்கும் பொதுக் கட்டமைப்பைத் தடுக்க மல்வத்தை மகாநாயக்க தேரர் உடன் தலையிட வேண்டும் என்று தேசிய பிக்குகள் முன்னணி வேண்டுகோள் விடுத்துள்ளது.

தேசிய பிக்கு முன்னணியின் தலைவர் தம்பர அமில தேரர், செயலாளர் கல்வெல்கல சந்தலோக்க தேரர் ஆகியோர் மகாநாயக்க தேரருக்கு அனுப்பியுள்ள கடிதத்திலேயே அவர்கள் இதனைக் கோரியுள்ளனர்.

வடக்கு-கிழக்குப் பகுதியில் தனியரசை உருவாக்கி நாட்டைப் பிளவுபடுத்த தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் முனைகிறது. உத்தேசப் பொதுக்கட்டமைப்பின் மூலம் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு சட்டரீதியான அங்கீகாரத்தை அரசு அளிக்க இருக்கிறது. நாட்டின் முன் உள்ள மிகப்பெரும் பேராபத்து இது. தமிழீழத் தனியரசை நோக்கி விடுதலைப் புலிகள் ஒவ்வொரு படிநிலையாக முன்னேறி வருவார்கள்.

இதற்காகத் தான் யுத்தநிறுத்த ஒபபந்தத்தையும் அவர்கள் ஏற்படுத்தினார்கள். பொதுக்கட்டமைப்பை உருவாக்குவதன் மூலம் முழுத் தமிழர் தாயகப் பகுதியையும் அவர்கள் தங்களது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்து விடுவார்கள்.

இது அவர்களின் தனியரசுக்கு வழிவகுக்கும். கடந்த காலங்களில் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் அரசு இதுபோன்ற ஒப்பந்தங்களுடன் இயங்கிய போதும் இறுதியில் விடுதலைப் புலிகள் இயக்கமே பயனடைந்திருக்கிறது. அதுதான் தற்போதும் நடக்கப் போகிறது.

பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தனக்கு எதுவும் தெரியாது எக்கிறார். அமைச்சர்களுக்கும் எதுவும் தெரியாது என்கின்றனர். இதர அரசியல் கட்சிகளும் அதுகுறித்து அறிந்திருக்கவில்லை. ஆகவே இப் பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக வெளிப்படையான விவாதம் நடத்த வேணடும் என அவர்கள் கேட்டுள்ளனர்.

இந்த நாட்டைப் பேராபத்திலிருந்து காப்பாற்ற மகாநாயக்க தேரர் இதில் உடனே தலையிட்டு பொதுக்கட்டமைப்பு கைச்சாத்திடப்படுவதைத் தடுக்கவேணடும் என்று அக்கடிதத்தில் மேலும் கூறப்பட்டுள்ளது. (து-4)

# நிர்வாக அதிகாரம் மட்டுமல்ல;அரசியல் அதிகாரமும் பகிரப்பட வேண்டும் என்கிறார் நிதியமைச்சர்

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இருக்கும் பகுதிகளுக்கு நிர்வாக அதிகாரங்களை மாத்திரம் பரவலாக்குமாறு ஜே.வி.பியினர் கூறுகின்றனர். ஆனால் அங்கு அரசியல் அதிகாரமும் பகிரப்பட வேண்டும் என்று நிதி அமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொதுக்கட்டமைப்பொன்று கட்டாயம் தேவை. அதற்கு நாம் 'சுனாமி நிவாரண சபை' எனப் பெயரிட்டுள்ளோம். பொதுஜன ஐக்கிய முன்னணியிலிருக்கும் அனைத்துக் கட்சிகளும் கொள்கையளவில் இதற்கு இணக்கம் தெரிவித்துள்ளன.

பொதுஜன ஐக்கிய முன்னணியும் மக்கள் விடுதலை முன்னணியும் இணைந்து கைச்சாத்திட்ட உடன்படிக்கையில் இருக்கும் நாட்டை முன்னேற்றும் திட்டத்திற்கு உட்பட்ட வகையிலேயே இது அமைந்துள்ளது.

"வீடுதலைப்புலிகள் குறிப்பிட்ட சில இடங்களைக் கைப்பற்றி தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்துள்ளனர்.

சுனாமி நிவாரணம் வழங்குவதற்காக அரசாங்கத்தினால் அந்த இடங்களுக்குச் சென்று பணியாற்ற முடியாது.

வீடுதலைப்புலிகளுடன் இணைந்தே இந்த இடங்களிலுள்ள மக்களுக்கு நிவாரண நடவடிக்கைகளை மேற்கொண்டாக வேண்டியிருக்கிறது. ஆனால் இது சம்பந்தமாக மக்கள் விடுதலை முன்னணிக்கு மாற்றுக் கருத்துக்கள் உள்ளன. அவர்கள் நிர்வாக அதிகாரத்தை மட்டும் பரவலாக்குமாறு கூறுகின்றனர். ஆனால் அரசியல் அதிகாரமும் பரவலாக்கப்பட வேண்டும் என்றே நாம் நினைக்கின்றோம்" என்றார்.(து)

## "மீண்டுமொரு யுத்தம் வேண்டாம்"

# பொதுக் கட்டமைப்புக்கு ஆதரவுகோரி ஆர்ப்பாட்டம்

பொதுக்கட்டமைப்புக்கு ஆதரவு தெரிவித்தும் விடுதலைப்புலிகளுடன் பொதுக்கட்டமைப்பினை ஏற்படுத்தக்கோரியும் யுத்தத்திற்கு எதிரான முன்னணியினர் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் ஒன்றினை நடாத்தினர். கொழும்பின் புறநகர்ப்பகுதியான மகரகமவில் இடம் பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் புதிய இடதுசாரி முன்னணித் தலைவர் வாசுதேவ நாணயக்கார, றுகுணு பெண்கள் அமைப்பு, நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான தொழிற்சங்க நிலையம், அரசாங்க அச்சிடுவோர் சங்கம், கண்டி மனித அபிவிருத்தி ஸ்தாபனம் ஆகியவற்றினைச் சேர்ந்தவர்கள் கலந்துகொண்டார்கள்.

அத்துடன், சர்வமத சமாதான நிலையத்தின் சார்பாக அசிதி தேரர், பத்தேகல சமிந்த தேரர் உட்பட பௌத்த இந்து, கிறிஸ்தவ, இஸ்லாம் மதப்பெரியார்களும் இதில் கலந்துகொண்டு பொதுக்கட்டமைப்பினை ஜனாதிபதி உடனடியாக ஏற்படுத்த வேண்டுமெனக் கோஷமெழுப்பினர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டவர்கள் "இனவாதம் பேசாதே","மீண்டுமொரு யுத்தம் வேண்டாம்", "சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கவும்", "பொதுக் கட்டமைப்பினை நிறுவுக","வடக்கு- கிழக்கில் யுத்தத்தினை திணிக்காதே","சந்தர்ப்ப வாத அரசியல்வாதிகளுக்கு இடமளிக்காதே", "சகோதரப் படுகொலைகளை உடனே நிறுத்து","ஜனாதிபதியின் தரத்தைப் பலப்படுத்தவும்", "வடக்கு,தெற்கு இனவாதத்தை ஒழி", "மதப் பிரசாரத்தினை நிறுத்து" என்பன போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்திய வண்ணம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அத்துடன், இவ் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றியோர் அனைவரும், பொதுக்கட்டமைப்பு உடனடியாக ஏற்படுத்தப்படாவிட்டால் அது நாட்டில் பாரிய விளைவுகளை ஏற்படுத்துமென எச்சரித்தனர். (து-4)

## மலேசியாவிலிருந்து மசகு எண்ணெய்

(கொழும்பு)

மலேசியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்ற மசகு எண்ணெயை நிவாரண அடிப்படையில் கொள்வனவு செய்வதற்கு இலங்கை அரசாங்கம் தயாராகின்றது.

இந்த உடன்படிக்கையின் பிரகாரம் 180 நாட்களுக்குள் கடன்களைத் திருப்பிச் செலுத்தக்கூடிய வகையிலேயே மசகு எண்ணெயை இறக்குமதி செய்யும் வாய்ப்பு கிடைத்திருப்பதாக பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

இலங்கைக்கு வருடமொன்றிற்கு 22 இலட்சம் மெற்றிக்தொன் மசகு எண்ணெய் தேவைப்படுகிறது. அதில் 20 சதவீதம் மலேசியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படுவதாகக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் யாலிய மெதகம தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 13ஆம் திகதி கோலாலம்பூரில் கைச்சாத்திடப்படும் உடன்படிக்கையின் பிரகாரம் 10 கோடி டொலரை 180 நாட்களுக்குள் திருப்பிச் செலுத்த முடியுமென்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இரு நாட்டின் பொருளாதாரத்திற்கும் இது அதிக அனுகூலங்களைப் பெற்றுத்தருமென்று பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் மேலும் தெரிவித்தார்.(அ-9)

## சட்டக் கல்லூரி அனுமதிக்கான அடிப்படைத் தகுதி ஆராயக்குழு

(கொழும்பு)

சட்டக்கல்லூரிக்கு புதிய மாணவர்களை அனுமதிப்பதற்காக அறிவிக்கப்பட்டுள்ள உத்தேச அடிப்படைத் தகுதி தொடர்பாக ஆராய்வதற்கு ஜனாதிபதி சட்டத்தரணி ஷிப்லி அஸீஸ் தலைமையில் குழுவொன்றை இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் நியமித்துள்ளது.

அடிப்படைத் தகுதிகள் பற்றி எழுந்துள்ள பல்வேறு பிரச்சினைகள் குறித்தும் இக்குழு ஆராயவுள்ளது.

இக்குழுவில், சட்டத்தரணிகளான ஐ.எல்.டீ. சில்வா, ரொஹான் சஷைபந்து, ஜே.கே.லியன சூரிய, காமினி கருன், டபிள்யூ.தயாரத்ன, ஜே.ஸி.வெலியமுன, ஓவென் டீ மெல்,ஆர்.எம்.எஸ்.ராஜபக்ஷ, ஜே. கே.எஸ்.ஜயவர்த்தன, அஜித் பெரேரா ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

மாணவர்களை அனுமதிப்பதற்கான அடிப்படைத் தகுதி தொடர்பாக எழுத்து மூலமான முறைப்பாடுகளைப் பெற்றுக்கொள்வதெனவும் தீர்மானித்துள்ள இக்குழுவினர் பின்வரும் விடயங்கள் குறித்தும் ஆராயவுள்ளனர்.

மாணவர்களை அனுமதிப்பதற்காகத் தற்போது நடைமுறையிலுள்ள அடிப்படைத் தகுதியை மாற்றியமைக்க வேண்டிய தேவை கல்லூரி அனுமதிக்கான குறைந்த படச கல்வித் தகைமை, அனுமதிக்கான போட்டிப்பரீட்சை, மாணவர்களை அனுமதிக்கும் ஆகக் கூடிய வயதெல்லையாக 35ஐக் கொள்ளல், போட்டிப் பரீட்சைகள் இன்றி உயர்தரப் பரீட்சையில் 'சற்' புள்ளியை அடிப்படையாகக் கொள்ளல் போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பாகவும் இக்குழுவீனர் ஆராயவுள்ளதாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# பிரச்சினை ஏற்படும் நேரங்களில் எல்லாம் நாட்டைக் கட்டியெழுப்பியது நாங்களே!

## ஐ.தே.க. உறுப்பினர் எடுத்துக்காட்டு

(கொழும்பு)

நாடு பிரச்சினைக்கு உள்ளான ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும ஐக்கிய தேசியக் கட்சி நாட்டை மீளக் கட்டியெழுப்பியதாகக் கட்சியின் மாத்தறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷமன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

லக்ஷமன் யாப்பாவின் 50ஆவது பிறந்த தினத்தையொட்டி ஒழுங்கு செய்யப்பட்ட வைபவமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

'யுத்தநிறுத்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்டதன் மூலம் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த எமது கட்சி அர்ப்பணிப்புடன் செயற்பட்டது. ஆனால் ஜனாதிபதி தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி பாராளுமன்றத்தை கலைத்து தேர்தலை நடாத்தி சமாதானத்தை குழப்பிவிட்டார்.

தற்போது நாடு பாரிய பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளது. பிரச்சினைகளை எதிர்நோக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஆட்சிப் பொறுப்பை ஐக்கிய தேசியக் கட்சியே ஏற்றுள்ளது. நாட்டை அபிவிருததி செய்ய இரண்டு வருடங்கள பொறுத்திருக்குமாறும், இதன் பின் வளர்ச்சியைக் காணமுடியுமென்றும் நாங்கள் கூறிய போதும் மக்கள் இதைக் கருத்தில் எடுக்காமல், கூட்டமைப்பை பதவியில் அமர்த்தி சொல்லொனா துன்பங்களை அனுபவித்து வருகின்றனர்' என்று அவா மேலும் தெரிவித்தார். (து-8)

# கட்டட வசதி கோரி நவாலி மகாவித்தியாலயம் நீக்கொட் அமைப்பிடம் கோரிக்கை

(மானிப்பாய்)

வலிதென்மேற்குப் பிரதேச சபைக்குட்பட்ட நவாலி மகாவித்தியாலயத்திலுள்ள பழமை வாய்ந்த கட்டடத் தொகுதியை அகற்றி மாணவர்களின் கல்வி அபிவிருத்திக்கு 3 மாடிக் கட்டடத்தைப் புதிதாக அமைத்துக் கொடுக்குமாறு வலி தெனமேற்குப் பிரதேச சபை செயலாளர், வலயக் கல்விப் பணிப்பாளர் ஊடாக நிக்கொட் பிரதிப் பணிப்பாளரைக் கேட்டுள்ளார்.

இப்பாடசாலை 1910ஆம் ஆணடில் ஸ்தாபிக்கப்பட்டு எதுவித கட்டட அபிவிருத்தியும் இன்றி நீண்டகாலமாக உள்ளது என்றும் பாடசாலை புதிய அதிபர் தலைமையிலான ஆசிரியர்கள் மற்றும அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம் ஆகியவற்றின் முழுமையான செயற்பாட்டில சிறப்பாக நடைபெறுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மாணவர் கல்வி செயற்பாட்டிற்குப் போதுமான கட்டட வசதி இல்லாத காரணத்தினால் மாணவர்கள் நீண்டகாலமாக மரங்களின் கீழே கல்வி கற்றுவருவதாக மானிப்பாய் பட்டினசபைத் திட்டமிடல் உள்ளூராட்சி அறிக்கை சமா்ப்பித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (அ-150)

# வடிசாலை ஊழியர்கள் பணிநீக்கம்

## ப.தெ.வ.அ.கூ.ச. சமாசம் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

வடிசாலை ஊழியர்களை பணிநீக்கம் செய்தமை தவறு என்று மனித உரிமைக்குழு தெரிவித்த அறிக்கை தொடர்பாக வட மாகாண. பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அவ்வறிக்கையில்,

கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுவின் 28.03.2005ஆம் திகதிய 62/2005 இலக்க சுற்று நிருபத்திற்கமைய சம்பள அதிகரிப்பு வழங்குவது தொடர்பில் 27.05.2005, 29.05.2005 திகதிய கடிதங்கள் மூலம் 30.05.2005இல் நடைபெற்ற சமாசத்தின் நெறியாளர் சபைக் கூட்டத்திற்கு சமுகமளிக்குமாறு கேட்டிருந்தும் வடிசாலை ஊழியர் தொழிற் சஙகப் பிரதிநிதிகள் சமுகமளிக்கவில்லை. இந்நிலையில் அதிகரித்த சம்பளம் வழங்குவது தொடர்பில் தீா்மானம் எட்டப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், வேலை நீக்கக் கடிதம் தொடர்பில் கூட்டுறவுப் பணியாளர் ஆணைக்குழுச் சட்டப் பிரமாணததின் பிரிவு 34க்கு அமைவாகவே சமாச நெறியாளர் குழு தீர்மானம் மேற்கொண்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஊழியர் நம்பிக்கை நிதியம் மற்றும் சேமலாப நிதியம தொடர்பில் சமாசத்தினால் பொறுப்பேற்கப்பட்ட 2004 ஏப்ரல மாதத்தில் இருந்து பணிபுரிகின்ற ஊழியர்களுக்கான ஊழியர் நம்பிக்கை நிதி, ஊழியர் சேமலாப நிதி என்பன உரிய நிறுவனங்களுக்கு உரிய முறைப்படி அனுப்பப்பட்டு வருகின்றது. அத்துடன் பனை அபிவிருத்திச் சபையினால செலுத்தப் படாதிருந்த செல்மதிகளும் எமது காலத்தில் செலுத்தப்பட்டு வருகின்றது.

அவர்களிடமிருந்து அதற்கான பற்றுச் சீட்டுக்களும் எமக்குக் கிடைத்துள்ள என்பதனை தெரிவித்துக்கொள்கின்றோம் என்றும் உள்ளது. (அ)

# பட்டதாரி பயிலுநர் ஆட்சேர்ப்புப் பரீட்சை ரத்து செய்யக்கோரி அவசரக் கடிதம்

(மானிப்பாய்)

வடக்கு கிழக்கு மாகாணத்தில் உள்ள பட்டதாரி பயிலுனர்களை ஆட்சேர்ப்புச் செய்யும் முகமாக மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினால் கடந்த ஏப்ரல் மாதம் 4ஆம் திகதி நடாத்தப்பட்ட பரீட்சையை உடன் ரத்துச் செய்யக் கோரி வடக்கு கிழக்கு மாகாணப் பட்டதாரி பயிற்சி ஒன்றியம வடக்குக் கிழக்கு மாகாண பிரதம செயலாளர் எஸ்.தங்கராசாவுக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.

அக்கடிதத்தில் 1999இல் 10 ஆயிரம் பட்டதாரிகள் திட்டத்தின கீழ் உள்வாங்கப்பட்ட பட்டதாரிகள நேர்முகப் பரீட்சையின் பின்னர் நிரந்தர நியமனம் செய்யப்பட்டுள்ளனர் என்றும்,

2004இல் இவ் பயிற்சிக்காகத் தெரிவு செய்யப்பட்ட நிர்வாக சேவை நுண்மதி பரீட்சை என்ற வித்தியாசமான ஒரு பரீட்சையை இலங்கை நிர்வாக சேவையை விட வித்தியாசமான, இலகுவில் கிரகிக்க முடியாத ஒரு பரீட்சையை நடாத்தி பரீட்சார்த்திகளுக்கு உள, உடல் ரீதியான பாதிப்பை ஏற்படுத்தி உள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் வடக்கு கிழக்கு தவிர்ந்த எப்பாகத்திலும் இப் பரீட்சை நடைபெறவில்லை. மாகாண பிரதம செயலாளர் என்ற வகையில வடக்கு கிழக்கு தமிழ், முஸ்லிம் மக்கள் பாதிக்கப்படாத வகையில் அனைவரையும் உள்வாங்கும் நோக்குடன் வித்தியாசமான இப் பரீட்சையை ரத்துச் செய்து அனைவர்க்கும் வேலைவாய்ப்பு என்ற அடிப் படையிலும் மூப்பு அடிப்படையிலும் நீண்டகாலமாக வேலையற்று அல்லலுறும் படடதாரிகளை பொருத்தமான அரச நிர்வாக துறையிற்கு உள்வாங்கும் நோக்குடன் நேர்முகப்பரீட்சை நடாத்துமாறு அக் கடிதத்தில் மேலும் கோரப்பட்டுள்ளது. (து-150)

# 24 மணிநேரமும் தொடர்ந்து பணிபுரியும் நட்டான்கண்டல் வைத்திய அதிகாரி

(முல்லைத்தீவு)

மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பகுதியில் உள்ள நட்டான் கண்டல் மருத்துவமனையின் வைத்திய அதிகாரிக்கான விடுதி 1999 ஆம் ஆண்டு ரணகோஷ இராணுவ நடவடிக்கையின் போது தகர்க்கப்பட்டதால், அங்கே கடமையாற்றும் வைத்திய அதிகாரி இருப்பிட வசதியின்றி பலத்த சிரமங்களுக்கு உள்ளாகியுள்ளார்.

குறிப்பிட்ட இராணுவ நடவடிக்கையின் போது சேதமாக்கப்பட்ட மருத்துவமனையும் அதனோடிணைந்துள்ள பிரசவ விடுதியும் 2004 ஆம ஆண்டு நெக்கோட் நிறுவனத்தால் புனரமைப்புச் செய்யப்பட்டதாயினும் வைத்திய அதிகாரியின விடுதி புனரமைக்கப்படவில்லை.

இங்கு கடமையாற்றும் வைததிய அதிகாரிக்கு தங்குமிட வசதி இல்லாததால் குறிப்பிட்ட வைத்திய அதிகாரி இரண்டு மைல்களுக்கு அப்பால் இருந்தே கடமைக்கு வர வேண்டியுள்ளது.

மருத்துவ மாதுகளுக்கான விடுதியும் இல்லாததால் பிரசவ மனையில் கடமையாற்ற மருத்துவ மாது எவரும் முன்வராததால் அவ் வேலையையும் குறிப்பிட்ட ஒரே ஒரு வைத்திய அதிகாரியே கவனிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுளளார்.

இவ் வைத்திய மனையில் உள்ள பிரசவ விடுதியையும் கவனிக்கும் பொறுப்பு இவ் வைத்திய அதிகாரியிடமேயுள்ளதால் அவா 24 மணி நேரமும் கடமையாற்ற வேண்டிய நிலையில் உள்ளார். அதனால இரவு பகலாக இவ் அதிகாரி இரண்டு மைல் தூரத்தை அடிக்கடி கடக்க வேண்டியுள்ளது.

இப் பிரதேசத்தில் ஒரேயொரு வைத்தியசாலையாக இதுவே இருப்பதால் பாதை சீர்கேடு காரணமாக இப் பிரதேச மக்கள் நினைத்தவுடன் வேறு எங்கும் செல்ல முடியாத நிலை நிலவுகிறது.

இப் பிரதேசம் அதிகஷ்டப் பிரதேசமாக உள்ளதால் இங்கே கடமையாற்ற வந்தவர்கள் தொடர்ந்தும் இங்கேயே 10, 15 வருடங்களாகக் கடமையாற்ற வேண்டிய நிர்ப்பந்த நிலையுள்ளதால் இவ் வைத்திய அதிகாரி நெருக்கடி காலந் தொடக்கம் இப் பிரதேசத்துக்கு சிறந்த சேவையாற்றி வருகின்றார்.

இவரின் சேவையை இப்பிரதேசம் தொடர்ந்து பெறுவதற்கோ அல்லது புதியவர் ஒருவர் வந்து சேவையாற்றுவதற்கோ, வசதியாக இராணுவததால் தகர்க்கப்பட்ட வைத்திய அதிகாரி விடுதியை அரசாங்கமோ அல்லது அரச சார்பற்ற நிறுவனங்களோ புனரமைப்பு செயது கொடுக்க வேணடியது காலத்தின தேவையாகும். (து-128)

## மருத்துவ மாதர்களுக்கு பயிற்சி

யாழ்.மாநகர சபை மருத்துவ மாதர்களுக்குப் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை பிரசவ விடுதியில் கடந்த பெப்ரவரி மாதம் முதல மே மாதம் வரை மகப்பேற்று பயிற்சி வழங்கப்பட்டது.

மகப்பேற்று வைத்திய நிபுணர் வைத்தியக் கலாநிதி குழந்தை வடிவேலினால் அவர்களுக்கு நான்கு மாதங்கள் அளிக்கப்பட்ட தொடர் பயற்சி கடந்த 31ஆம் திகதி முடிவடைந்தது. (து-101)

## கலாபூஷணம் விருது

(யாழ்ப்பாணம்)

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் வருடந்தோறும வழங்கப்பட்டு வரும் "கலாபூஷணம்" விருதிற்கென, தமிழ்க் கலைஞர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கான விண்ணப்பங்கள் குறித்த மாவட்ட அரசாங்க அதிபர் ஊடாக இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்திற்கு ஜூன மாதம் 30ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கப்படவேண்டும். (து-2)

# ஆழிப்பேரலையால் அழிந்து போன சன சமூக நிலையங்கள்

## புனரமைப்பில் அக்கறையில்லை என அங்கலாய்ப்பு

(முல்லைத்தீவு)

"ஆழிப் பேரலையின் சீற்றத்தால் முல்லைத்தீவு மாவட்டததில 50க்கும் மேற்பட்ட சன சமூக நிலையங்கள் சிதைந்து சீரழிந்துவிட்டன. இவற்றின் புனரமைப்பில், அபிவிருத்தியில் எந்தவொரு நிறுவனமோ அரசாங்கமோ அக்கறை கொள்வதாகத் தெரியவில்லை"

மாந்தை கிழக்கு பிரதேசத்தில் பாலிநகர் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற சுற்றாடல் பாதுகாப்பு அபிவிருத்தி கருத்தரங்கில் தலைமை உரையாற்றிய மரந்தை கிழக்கு சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் சுவாம்பிள்ளை முடியப்பு இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், சனசமூக நிலையங்களின் நிதி நிலைமையைக் கட்டியெழுப்பவும் அழிந்த நிலையங்களைப் புனர்நிர்மாணம் செய்யவும் பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற மக்களின் அபிலாஷைகளைத் தீர்க்கவும் வேண்டிய காலகட்டம் இதுவாகும் என்றார்.

சனசமூக நிலையங்களுககும் ஏனைய தொண்டர் அமைப்புக்களைப் போல் ஒப்பற்ற வேலைகள் வழங்கி அவர்களின் நிதி நிலையை மேம்படுதத வேண்டும எனறு பாகிநகா உதயசூரியன் சன சமூக நிலையததால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்குப் பதிலளித்துப் பேசிய முடியப்பு,

உண்மையில் ஏனைய அமைப்புக்களுடன் ஒப்பிடுகையில் சன சமூக நிலையங்கள் வளர்ச்சி குன்றியே காணப்படுகின்றன என்றும அதனால் ஒப்பற்ற வேலைகளில் அவர்களுக்கு இடமளிப்பது மிகவும் அவசியமாகும் என்றும் இக் கோரிக்கையை மாவட்ட சன சமூக நிலையங்களின் ஒன்றியம் மூலமாக உள்ளூராட்சி ஆணையாளருக்குத் தெரியப்படுத்துவோம் என்றும் கூறினார்.

இக் கருத்தரங்கில் பாகிநகா மகாவித்தியாலய அதிபர் து.யேகானந்தன், சமூக சேவைகள் உத்தியோகத்தர் ச.குணசிங்கம், கிராம சேவை உத்தியோகத்தர் வ.பாலசிறி ஆகியோரும் கலந்துகொண்டனர். (து-128)

# தொழில் உபகரணங்கள் வழங்கல்

(முல்லைத்தீவு)

சுனாமிப் பேரலை அனர்ததத்தினாலபாதிக்கப்பட்ட மக்களுக்கு வாழ்விடங்களை அமைத்துக் கொடுத்து வருவதோடு அவர்களுக்கான தொழில் வாய்ப்புக்களையும் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் ஏற்படுத்திக் கொடுத்து வருகின்றது. அந்தவகையில முல்லைத்தீவு அழககச் சங்கத்தைச சேர்ந்த 16 தொழிலாளர்களுக்கு கடந்த திங்கட்கிழமை காலை தொழிலுக்கான உபகரணங்களை தமிழர் புனர்வாழ்வுக் கழகம் வழங்கியுள்ளது.

சுனாமிக்குப் பின்னரான துரித புனாவாழ்வு அபிவிருத்திச் சேவை நிகம்ச்சிக் கிட்டக்கிர்கமைய (மன்னெடுக்கப்பட்ட இந்நிகழ்வு முல்லைப் பிரதேச அழககச் சங்கத் தலைவர் காண்டீபன் தலைமையில் இடம்பெற்றது. (து)

## விசேட பொதுக்கூட்டம்

யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அவசர விசேட பொதுக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு ஈச்சமோட்டையில் உள்ள கழகத்தின் பணிமனையில் நடைபெறும்.

இக் கலந்துரையாடலில் சகல உதைபந்தாட்டக் கழகங்களின் உறுப்பினர்களும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகினறனர். (து-8)

# திருமலையில் சமாதானப் பேரணி

(திருகோணமலை)

திருகோணமலையில் நிலவும் பதற்ற நிலையினை முடிவுக்குக் கொண்டுவர நடவடிக்கை எடுக்குமாறு கோரி கடந்த புதன்கிழமை திருகோணமலை பெண்கள், சிறுவர்கள் பராமரிப்பு நிலையத்தின் அனுசரணையுடன் மூவினங்களையும சேர்ந்த பெண்கள் சமாதானப் பேரணியொன்றினை நடாத்தினர்.

இந்தப் பேரணியினைத் தொடர்ந்து மாவட்ட யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர், மாவட்ட அரச அதிபர், தமிழீழ விடுதலைப் புலிகள் ஆகியோரிடம் இது தொடர்பான மனுக்களைப் பெண்கள், சிறுவர் பராமரிப்பு நிலையத்தின் தலைவி யூடி கையளித்தார். (து-4)

## அரசசேவை ஆணைக்குழுவின் அங்கீகாரத்துக்கு

# வைத்தியத் துறையினர் மோசடிகளை விசாரிக்க விசேட விசாரணைக் குழு நியமனம்

(கொழும்பு)

வைத்தியர்கள் அல்லது மருத்துவ ஊழியர்கள் நோயாளருக்கு எதிராகப் புரியும் மோசடிகள் பற்றித் தெரிவிக்கப்படும் முறைப்பாடுகளைக கவனிப்பதற்கு விசேட விசாரணைக் குழுவை நியமிப்பது பற்றிச் சுகாதார அமைச்சு ஆராய்ந்து வருகின்றது.

அரசாங்க சேவை ஆணைக் குழுவின் அங்கீகாரம் கிடைக்கப்பெறும் பட்சத்தில் இத்தகைய குழு உடனடியாக நியமிக்கப்படுமென அமைசசர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவிததார். (அ-9)

# ஈழத்தின் தேசிய இனப் பிரச்சினைகள் 18

## கலாநிதி செ.திருநாவுக்கரசு

தொடர்ச்சியாக இடம்பெற்ற தோல்விகளும் ஏமாற்றங்களும் சிறுபான்மையினங்களைப் பொறுத்தவரையில் அதுவும் பிரதானமாகத் தமிழ்மக்களைப் பொறுத்தவரையில் காலவோட்டத்தில் பலமாற்றங்களை உருவாக்கின. பழைய கூட்டுக்கள் கழன்றும், புதிய கூட்டுக்கள் அமைத்தும் தமிழ்த் தலைமைகள் போராடின. அதேவேளையில் ஆளுவோரின் ஆதிக்கக் கரங்களும் நீண்டு கொண்டேபோயின. இந்நிலையில் இலங்கையின் இனக்குழுக்களுக்கிடையில் எக்காலத்திலும் ஏற்படாத முறுகல் நிலைமைகள் ஏற்படத்தொடங்கின. வன்முறையில் நம்பிக்கை வைக்கவேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பதாகக் கருதும் தீவிரவாத சிந்தனைப் போக்குள்ளோர் அரசியல் அரங்கிலே காய்களை நகர்த்தத் தொடங்கினர். மெல்ல மெல்ல மிதவாதிகளது ஓசைகளையும் தாண்டித் தீவிரவாதிகளினது குரல்கள் தமிழ்பேசும் மக்களை ஆட்கொள்ளத் தொடங்கின.

சிங்கள-பௌத்த மேலாதிக்கத்துக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்துள்ள தமிழ்த் தீவிரவாதத்தை எதிர்கொண்ட ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் அரசாங்கமானது, அரசியலமைப்பில் பல திருத்தங்களைச் செய்துகொண்டே இருந்தது. 'யூ.என்.பி.அரசிற்கு மிகப் பெரும்பான்மையான பாராளுமன்ற உறுப்பினர்கள் இருந்த காரணத்தினால் இந்த யாப்பின் ஏற்பாடுகளுக்கமைய பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்குப் பெரும்பான்மையுடன் பல திருத்தங்களைக் கொண்டு வரமுடிந்தது. ஜெயவர்த்தனாவின் அரசு கலைக்கப்படும்வரை இந்த யாப்பிற்குப் பதினெட்டுத் திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. இத்திருத்தங்களுள் (ஆறாவது) 6வது திருத்தம் என அழைக்கப்படும் திருத்தம் தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் மிக முக்கியமானது' 1983இல் நடைபெற்ற இனக்கொலைகள்ளத் தொடர்ந்து இருவாரங்களுக்குள், அதாவது 1983ஆம் ஆண்டு ஆவணி 8ஆம் திகதி இது சட்டமாக்கப்பட்டது. இந்த ஆறாவது சட்டமூலம் 1978 அரசியல் யாப்பின் 157ஆம் பிரிவிற்கு அடுத்ததாக 157A என்று எண்ணிடப்பட்ட பிரிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இச் சட்டத்தின் முதலாவது துணைப் பிரிவின்படி "இலங்கைத் தீவிற்கு உள்ளோ, வெளியிலோ வசிக்கும் எந்த நபரும், ஸ்ரீலங்காவின் ஆட்சிக்குட்பட்ட பகுதிகளில் வேறு தனியான ஓர் அரசை நிறுவுவதற்கு நேரடியாகவோ, மறைமுகமாகவோ ஆதரவு நல்குவதோ அந் நோக்கத்த்தைப் பரப்புவதோ, அதற்கான நிதியுதவி வழங்குவதோ, உற்சாகப்படுத்துவதோ அல்லது அந்த நோக்கத்தை வலியுறுத்துவதோ தடைசெய்யப்பட்டது. அதேபோல எந்த அரசியல் கட்சியோ அமைப்போ இலங்கையின் எப்பகுதியிலும் வேறு ஒரு அரசை நிறுவுவதை தனது நோக்கங்களில் ஒன்றாகக் கொண்டிருப்பது தடைசெய்யப்பட்டது" எனக் கூறப்பட்டமை தமிழர்களின் தனியரசுக் கோரிக்கையைச் சட்டரீதியாகத் தடைசெய்த முயற்சியேயாகும். ஆறாவது திருத்தச் சட்டத்தின் ஏழாவது அட்டவணையில் இணைக்கப்பட்ட சத்தியப்பிரமாண விதிகளின் கீழ், தமிழ்பேசும் பெரும்பான்மையான மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்திய 'தமிழர் விடுதலைக் கூட்டணி' பாராளுமன்றத்தைத் .துறந்தமையும், அதனால் எழுந்த அரசியல் வெற்றிடங்களும், தொடர்ந்து நாட்டில் தோற்றுவிக்கப்பட்ட கசப்பான அரசியல் சூழ்நிலைகளும், அதன் காரணமாகத் தீவிரம் பெற்ற வன்முறைகளும் இலங்கையின் அமைதியையும் அரசியல் திறனையும் கேள்விக்குரியவையாக்கினவெனலாம். 1978இல் கொண்டுவரப்பட்ட விடுதலைப் புலிகள் தடைச்சட்டமும் ,1979இல் நிறைவேற்றப்பட்ட பயங்கரவாதத் தடைச்சட்டமும் கூட தமிழர் மீதான அடக்குமுறைகளுக்கே வழிவகுத்ததென நம்பப்படுகின்றது. அத்துடன் வருடக்கணக்காகத் தொடர்ந்து வரும் அவசரகாலச் சட்ட நீடிப்பும், அடிக்கடி அமுல்படுத்தப்படும் ஊரடங்கும் சட்டங்களும் இலங்கையின் இனவுறவைக் காப்பாற்றும் முயற்சிகளில் வெற்றிகாணவில்லை. எனவே சிங்கள பௌத்த பேரினவாதத்தைக் காப்பாற்றும் முயற்சியாகத் தமிழ்பேசும் மக்களுக்கு எதிராகக் காலத்துக்குக் காலம் ஆட்சிக்கு வந்த அரசாங்கங்களினால் கொண்டுவரப்பட்ட சட்டங்களினால் இந்த நாட்டின் இனங்களுக் கிடையே வேற்றுமைகள் விரிவடையவும், குரோதங்கள் மேம்படவும், கசப்புக்கள் வளர்ச்சி காணவுமே முடிந்தனவெனில் அது தவறாகாது. இனங்களுக்கான ஐக்கியம் எட்டியெட்டியே சென்று கொண்டிருக்கிறது என்பதே உண்மையான கூற்றாகும்.

### ஒப்பந்தங்கள்

சிங்கள-பௌத்த மேலாதிக்க உணர்வினைத் துலாம்பரமாக வெளிப்படுத்தக்கூடிய பல சம்பவங்கள் இலங்கை அரசியல் வரலாற்றில் நடந்தேறியுள்ளன. பெரும்பான்மையினத்தவரான சிங்களத் தலைவர்களுக்கும், சிறுபான்மையினத்தவரான தமிழ்த் தலைவர்களுக்குமிடையில் ஏற்படுத்திக்கொண்ட அரசியல் ஒப்பந்தங்கள் இத்தகைய நிகழ்வுகளுக்குச் சாட்சியங்களாய் அமைந்துள்ளன. இவ்வாறான உடன்படிக்கைகள் யாவும் சுதந்திரத்துக்கு முந்திய, பிந்திய இரு கால கட்டங்களிலும் இடம்பெற்றுள்ளன. இருப்பினும், பல்வேறு கால கட்டங்களில் ஏற்படுத்திக்கொண்ட இவைகளினால், இலங்கையின் தேசிய இன மக்களிடையே அவநம்பிக்கைகள் வளர்ந்து பிளவுகள் ஏற்படவே வழிபிறந்தது எனலாம். சிங்களத் தலைமைகள், தம்மால் உருவாக்கம் பெற்ற உடன்படிக்கைகளை மதியாமலோ அல்லது பேரினவாத அச்சுறுத்தல்களுக்கு அடிபணிந்தோ நிறைவேற்றாது தட்டிக்கழித்தன. சில ஒப்பந்தங்கள் கிழித்தெறியப்பட்டன. இதன்மூலம் சிங்கள-பௌத்த மேலுரிமையாளர்களின் மனப்பாங்கு உணர்த்தப்பட்டது. தமிழ்த் தலைவர்கள் தாம் ஏமாற்றப்பட்ட நிலையில் தேசிய ஐக்கியத்தில் நம்பிக்கையீனமடைந்தனர்.

> கடந்த எழுபத்தைந்து வருடங்களில் சிங்கள-தமிழ்
> ஒப்பந்தங்கள்-உடன்படிக்கைகளினாலே பயன்
> அடைந்தவர்கள் சிங்கள மக்கள்தான். தமிழர்களின்
> உதவியுடன் தங்களுக்குத் தேவையானவற்றைப் பெற்றுக்
> கொண்டார்கள். தமிழர்கள் வெறுங்கையோடு
> வந்ததுதான் மிச்சம்"

இவ்வாறு முன்னாள் ஊர்காவற்றுறைத் தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினரான வ.நவரெத்தினம் அவர்கள் 1968இல் இலங்கைப் பாராளுமன்ற உரையில் குறிப்பிடுவது விரக்தியினாலேயெனலாம். 1919ஆம் ஆண்டு உருவான இலங்கைத் தேசிய காங்கிரஸ் தலைவர்கள் அது உருவான சில மாதங்களின் பின்னர் ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டனர். ஜேம்ஸ் பீரிஸ், ஈ.ஜே.சமரவிக்கிரம, கே.சி. ஆகியோர் சிங்களவர் பக்கமாயும் தமிழர் பக்கமாகப் பொன்.அருணாசலமும் இருந்து சட்டசபையில் பிரதிநிதித்துவம் சம்பந்தமானதோர் உடன்பாடு கண்டனர். இதுவே முதலாவது சிங்கள-தமிழ் ஒப்பந்தமாகக் கருதப்படுகின்றது. இறுதியில் இவ்வொப்பந்தமானது, ஏனைய தேசிய காங்கிரஸினரைக் கட்டுப்படுத்தாதெனக்கூறிச் சிங்களத் தலைவர்களால் கிழித்தெறியப்பட்டதும், பொன். அருணாசலமவர்கள் தேசிய காங்கிரஸிலிருந்து விலகியமையும் கசப்பான நிகழ்வுகளாகும்.

1925ஆம் ஆண்டளவில், யாழ்ப்பாணத்திலுள்ள சேர்.வைத்திலிங்கம் துரைசுவாமி அவர்களுடைய 'மகேந்திரா' இல்லத்தில், அரசியற் சீர்திருத்தம் கோரிப் போராடும் இலங்கையரின் ஒற்றுமையை, இங்கிலாந்து அரசுக்குக் காட்டும்பொருட்டு, இரண்டாவது சிங்கள- தமிழ் ஒப்பந்தம் உருவானது. இது 'மகேந்திரா ஒப்பந்தம்' எனவும் அழைக்கப்பட்டது. இதில் சி.இ.கொரியாவும் அவரது சகோதரர் விக்டர் சி.இ.கொரியாவும் உள்ளிட்ட சிங்களத் தலைவர்கள் பலர் பங்கெடுத்துக்கொண்டனர். (தொடரும்)

# மணிபல்லவத்தில் மஹோற்சவம்

# நயினை நாக பூசனி அம்மன் பாமாலை

## நான்காம் திருவிழா



## மல்லிகை மங்கை

மல்லிகைக் கடலில் மிதக்கும் பூசணி
மக்கள் கண்ணீர் கலைக்கும் பூசணி
கல்வியும் செல்வமும் வழங்கும் பூசணி
கவிதையும் காவியமும் எழுதும் பூசணி

நல்லை அமிழ்தன்

## அன்புமழை அகிலமெலாம் பொழியவேண்டும்

துன்பியலாம் துயரப்போர்
ஒழிய வேண்டும்
தூயவொளி உலகெங்கும்
ஒளிர வேண்டும்
அன்புமழை அகிலமெலாம்
பொழிய வேண்டும்
அனைவருமே அதில் மூழ்க
அருள வேண்டும்!

தென்நல்லை கு.பகீரதன்

## தீர்ப்பாய் இடரை வேருடனே

மண்ணில் மக்கள் துயர்தீர
வழிகள் பலவும் அமைவாக
எண்ணம் எல்லாம் நிறைவேற
உளத்தில் நன்றாய்ப் பதிந்திடவே
நயினைக் கோவில் வீதியினில்
வலமாய் இவரும் காட்சிதனைக்
கண்டு தொழுதேன் நாகம்மா
தீர்ப்பாய் இடரை வேருடனே

கவிமணி கந்த முருகேசதாசனார்

## நலங்கள் பல தந்திடும் அம்மா

நயினையிலே வீற்றிருக்கும் நாகபூசணி அம்பாளே
நலங்கள் பல தந்திடும் அம்பாளே
அலை கடலின் மத்தியிலே அமர்ந்தவளே தாயே
அல்லல்படும் அடியார் துயர்துடைப்பவளே
பிள்ளைச் செல்வம் என்றுவிட்டால் அள்ளிக்கொடுப்பாயே
பிணிகள் பல தீர்த்திடுவாய் நாக பூசணியாளே
நயினை மக்களின் முழு முதற்தெய்வமே நாக பூசணியாளே
நலங்கள் பல தந்து நாடு செழிக்க வாழவைப்பாளே

சண் மகேஷ்

## அன்னம் பாலித்து உவப்பவள்

அந்நாள் அமுத சுரபியெவ் வூரிலெனச்
சந்தேகம் கொள்வார்தாம் நா[illegible]—எந்நாளும்
வந்தார்க்கு அன்னம் பாலித் துவப்பாளை
சந்ததமும் போற்றுவோம் யாம்.

சண்

# ஐ.நா. பாதுகாப்புச் சபை நிரந்தர பதவி குழு - 4 நாடுகள் புதிய திட்டம்

ஐ.நா.பாதுகாப்புச் சபை நிரந்தர உறுப்பினர் பதவி பெறுவதற்கு இந்தியா உள்ளிட்ட 4 நாடுகள் அமைப்பு புதிய சமரசத் திட்டமொன்றை முன்வைத்துள்ளன. இதன்படி இந்தியா உள்ளிட்ட நான்கு நாடுகள் ஐ.நா.பாதுகாப்புச் சபை நிரந்தர உறுப்பினர்களாக இடம்பெறும். ஆயினும் 15 ஆண்டுகள் வரை வீட்டோ எனும் ரத்து அதிகாரத்தை இந்த நாடுகளும் கோராது.

ஐ.நா. பாதுகாப்புச் சபை நிரந்தர உறுப்பினர் பதவி பெறுவதற்கு இந்தியா, ஜெர்மனி, ஜப்பான் மற்றும் பிரேசில் ஆகிய நானகு நாடுகள் விருப்பம் தெரிவித்துள்ளன. ஆயினும் இந்த நான்கு நாடுகள் வீடடோ அதிகாரத்துடன் ஐ.நா.பாதுகாப்பு சபை நிரந்தர உறுப்பினர் பதவி பெற சில நாடுகள் எதிர்ப்பு தெரிவித்தன. இந்தப் பின்னணியில்தான் புதிய சமரசத் திட்டமொன்றை குழு -4 அமைப்பு நாடுகள் முன்வைத்துள்ளன. புதிய சமரசத் திட்டம் ஐ.நா. உறுப்பு நாடுகளிடையே சுற்றுக்கு விடப்பட்டுள்ளன.

ஐ.நா.பாதுகாப்புச் சபையில் தற்போது 15 நாடுகள் அங்கம் வகிக்கின்றன. இதில் 5 நாடுகள் வீட்டோ அதிகாரம் படைத்த நிரந்தர உறுப்பு நாடுகளாகும். அமெரிக்கா, ரஷ்யா, பிரிட்டன், பிரான்ஸ் மற்றும் சீனா ஆகியவை தற்போது வீட்டோ அதிகாரம் படைத்த நிரந்தர உறுப்பு நாடுகளாகும். இந்தியா உள்ளிட்ட குழு - 4 நாடுகள் அமைப்பு முன்வைத்துள்ள புதிய திட்டத்தின்படி ஐ.நா. பாதுகாப்புச் சபை உறுப்பினர் எண்ணிக்கையை 15 லிருந்து 25 ஆக உயர்த்த யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐந்து நிரந்தர உறுப்பினர் நாடுகளுடன் மேலும் 6 நிரந்தர உறுப்பினர்களைச் சோப்பது எனவும் திட்டத்தில கூறப்பட்டுளளது. இந்தியா, ஜெர்மனி, ஜப்பான், பிரேசில் தவிர ஆபிரிக்காவிலிருந்து இரண்டு நாடுகளை நிரந்தர உறுபபு நாடுகளாகத் தேர்வு செய்யலாம் என தெரிவிக்கப்பட்டுளளது. இரண்டு வாரங்களாக நடந்த தீவிரமான விவாதங்களுககுப் பிறகு இந்தப் புதிய சமரச திட்டம் தயரிக்கப்பட்டுள்ளது. இப் புதிய திட்டதின்படி புதிய நிரந்தர உறுப்பினர்களாகச் சேரும் நாடுகளின் வீட்டோ உாிமையில் மாற்றம் ஏதும் கிடையாது.

ஆனால், முதல் 15 ஆண்டுகளுக்கு வீட்டோ உரிமையைக் கோருவதை இந்தியா உள்ளிட்ட புதிய நிரந்தர உறுப்பு நாடுகள் நிறுத்திவைக்க 15 ஆண்டுகளுககுப் பின்னர் இது பற்றி முடிவு செய்யலாம் என்று தெரிவிக்கப்பட்டுளளது. சுருக்கமாகச் சொன்னால், இந்தியா உள்ளிட்ட புதிய நிரந்தர உறுப்பு நாடுகளுக்கு 15 ஆண்டுகளுக்கு ரத்து அதிகாரம் இருக்காது. அதன் பின்னர், புதிய நாடுகளின் செயல்பாட்டு அடிப் படையில ரத்து அதிகாரம் கிடைக்கும்.

புதிய சமரச திட்டத்தின்படி வீட்டோ அதிகாரம் சம்பந்தப்பட்ட கோட்பாடுகளில மாற்றம ஏதும் கிடையாது. அதை 15 ஆண்டுகளுக்கு நிறுத்தி வைக்கிறோம் என ஐ.நா. சபைக்கான இந்தியத் தூதா நிருபம் சென் தெரிவித்தார். இந்த 15 ஆண்டு காலத்தில் புதிய நிரந்தர உறுப்பு நாடுகள் எப்படி செயலபடுகின்றன என்பதை ஐ.நா. சபையின் உறுப்பினர்கள் தீர்மானிக்கலாம. அதன் அடிப்படையில் முடிவு செய்யலாம் எனவும் அவர் கூறினார்.

ஐ.நா சபையில் தற்போது 191 நாடுகள் உறுப்பினர்களாக அங்கம் வகிக்கின்றன. புதிய சமரசத் திட்டத்திற்கு ஐ.நா. பொதுச சபையில் மூன்றில் இரண்டு பங்கு ஆதரவு பெறமுடியும் என இந்தியா, ஜெர்மனி, ஜப்பான், பிரேசில் ஆகிய நாடுகளின் ஐ.நா தூதர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர். குழு - 4 நாடுகள் அமைப்பு முன்வைத்துள்ள புதிய திட்டம் பல அம்சங்களை முன்வைக்கிறது. தற்போது அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ரஷ்யா, சீனா ஆகிய நிரந்தர உறுப்பு நாடுகளிடம் வீட்டோ அதிகாரம் இருப்பதற்கே பல ஆபிரிக்க நாடுகள் எதிர்புத் தெரிவித்து வருகின்றன.

இந்நிலையில் ஐ.நா. பாதுகாப்புச் சபை உறுப்பினர்கள் எண்ணிக்கையை 25 ஆக விஸ்தரித்து 11 வீட்டோ அதிகாரம் படைத்த நாடுகள் அதில் இருப்பது செயல்படாத ஒன்றாகிவிடும் என பல நாடுகளும் கருத்துத் தெரிவித்தன. இந்தப் பின்னணியில்தான் 15 ஆண்டுகாலத்திற்கு வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்துவதை நிறுத்திவைககலாம் என இந்தியா உள்ளிட்ட குழு - 4 நாடுகள் அமைப்பு புதிய சமரசத் திட்டததை முன்வைத்துள்ளன.

இந்தப் புதிய சமரசத்திட்டம அமுலாகுமானால், தற்போது வீட்டோ அதிகாரம படைத்த அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ரஷ்யா, சீனா ஆகியவற்றையும் கவனமாக செயல்பட வேண்டிய நிலைமை ஏற்படும் என பல நாடுகளின் ஐ.நா. தூதர்கள் தெரிவித்துள்ளனர். குழு - 4 நடுகள் அமைப்பு முன்வைததுள்ள புதிய சமரசத் திட்டத்தை ஐ.நா. பொதுச் சபையில் முன்மொழியத் தற்போது வீட்டோ அதிகாரம் படைத்த நாடான பிரான்ஸ் ஒப்பு கொண்டுள்ளது.

இந்தப் புதிய சமரசத் திட்டத்தை முன்மொழிய மேலும் பல நாடுகள முன்வந்திருப்பதாக ஐ.நாவுக்கான இந்தியத் தூதா நிருபம் சென் கூறினார். இந்த ஆதரவு அதிகரித்துக்கொண்டே போவதாகவும் அவர் கூறினார் ஜூன் மாத கடைசியில் புதிய சமரசத்திட்டததை ஐ.நா பொதுச் சபையில் வாககெடுப்புக்கு விட குழு - 4 நாடுகள் அமைப்பு முடிவு செய்துள்ளது. இதனைத் தொடர்ந்து புதிய நிரந்தர உறுப்பினர்களைத் தேர்வு செய்யும் தீர்மானம் தாக்கல் செய்யப்படும்.

மூன்றாவது தீர்மானம், ஐ.நா. பாதுகாப்புச் சபை உறுப்பினர்கள் எண்ணிக்கையை 25 ஆக அதிகரிக்கும் வகையில் ஐ.நா சாசனத்தில் திருத்தம் செய்யும் வகையில் முன்மொழியப்பட்டது. இந்த மூன்று தீர்மானங்களையும் ஐ.நா. பொதுச்சபையில் நிறைவேற்ற வேண்டுமானால், அதற்கு மூன்றில் இரண்டு பங்கு ஆதரவு கட்டாயத் தேவையாகும். இந்த மூன்று தீர்மானங்களையும் நிறைவேற்றுதல் ஜுலை மாதத்திற்குள் முடிவடைந்துவிடும் என இந்தியா உள்ளிட்ட குழு - 4 நாடுகள் அமைப்பு எதிர்பார்க்கிறது.

ஐ.நா. சபையின் உச்சி மாநாடு செப்டம்பரில் நடைபெறுகிறது. அனைத்து நாடுகளின் தலைவர்கள் அதில் பங்கேற்கிறார்கள். அதற்கு முன்னதாகவே மேற்கண்ட மூன்று தீர்மானங்கள் மற்றும் அது தொடர்பான பணிகள் முடிவடைந்துவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது. (அ)

## கைவிடப்பட்ட ஈராக் தூதரகத்தில் ஆயுதங்கள்

(லண்டன்)

2003ஆம் ஆண்டு ஈராக் யுத்தம் ஏற்பட்டதும் லண்டனில் உள்ள ஈராக் தூதரகம் மூடப்பட்டது.

இந்த நிலையில் ஈராக்கில் புதிய அரசு ஏற்பட்டதும் அங்கு வந்த ஈராக் அதிகாரிகள் ஆயுதங்கள் பதுக்கிவைக்கப்பட்டு இருப்பதைக் கண்டுபிடித்தனர்.

அவர்கள் கொடுத்த தகவலில் அங்கு வந்த பொலிஸார் ஆயுதங்களை எடுத்துச் சென்றனர். (அ)

## செனற் சபைத் தேர்தலில் மீண்டும் ஹிலாரி போட்டி

(அமெரிக்கா)

அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி கிளின்ரனின் மனைவி ஹிலாரி கிளின்ரன் செனற் சபைக்கான தேர்தலில் போட்டியிடவுள்ளார்.

இவர் ஏற்கனவே 2000ஆம் ஆண்டு நியூயோர்க் தேர்தல் கல்லூரியில் பேட்டியிட்டு செனற்சபைக்குத் தெரிவானவா. இவரது பதவிக்காலம் அடுத்த ஆண்டு முடிவடைவதைத் தொடர்ந்து மீண்டும் அவர் போட்டியிடப் போவதாக அறிவித்துள்ளார். எனினும் இந்தத் தேர்தலில் பேட்டியிடுவதை குடியரசுக்கட்சியினர் பெரிதாக விரும்பவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. எனவே அவருககுப் போட்டியாக தமது கட்சியின் சார்பில் முன்னாள் ஜனாதிபதி றிக்ஸனின் உறவினரான எட்வேட் ஹக்ஸை நிறுத்தக் குடியரசுக் கட்சி தீர்மானித்துள்ளது. எவ்வாறாயினும 2008ஆம ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயகக் கட்சியின் சார்பில் ஹிலாரி கிளின்ரன் போட்டியிடுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. (அ-2)

## இந்தோனேஷியாவில் மீண்டும் சுனாமி அபாயம் இங்கிலாந்து விஞ்ஞானி எச்சரிக்கை

(சிட்னி)

கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் 26ஆம் திகதி இந்தோனேஷியாவின் சுமாத்ரா தீவுப பகுதியில் கடலுக்கு அடியில் ஏற்பட்ட நில நடுக்கத்தை தொடர்ந்து சுனாமி பேரலைகள் எழுந்தது. இந்தோனேஷியா, இந்தியா, இலங்கை உள்பட பல்வேறு நாடுகளில் 3 லட்சம் பேர் இதில் பலியானார்கள்.

கடந்த மார்ச் மாதம் 28ஆம் திகதி மீண்டும் நிலநடுக்கம் ஏற்பட்டது. இதில் சுனாமி அலைகள் ஏற்படவில்லை என்றாலும நில நடுக்கத்தில் ஆயிரக்கணக்கான வீடுகள் இடிந்து தரைமட்டமானது.

இந்த நிலையில் இந்தோனேஷியாவில் 3வது முறையாக நிலநடுக்கம் ஏற்படும என்று இங்கிலாந்து விஞ்ஞானி ஒருவர் கூறியிருக்கிறார்.

ஜான் மெக்குளாங்கி என்ற அந்த விஞ்ஞானி ஏற்கனவே இந்தோ னேஷியாவில் 2வது முறையாக நிலநடுக்கம் ஏற்படும் என்று கணித்து கூறியிருந்தார். அதன்படி மார்ச் மாதம் அங்கு நிலநடுக்கம் ஏற்பட்டது.

3வது முறையாக மீண்டும் நிலநடுக்கம் ஏற்படும்போது சுனாமி பேரலைகள் உருவாகும் என்று அவர் எச்சரித்திருக்கிறார். இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவில் 8.5 புள்ளிகளாக இருக்கலாம் என்றும் அவர் கூறியிருக்கிறார்.

இந்த நிலநடுக்கத்தால் உருவாகும் சுனாமி பேரலைகள் ஆஸ்திரேலியாவின் பெர்த் நகரம் வரை தாக்கும். இந்த நில நடுககம் இன்னும் ஒரு சில மாதங்களிலும் ஏறபடலாம் பல ஆண்டுகளுக்கு பிறகும் ஏற்படலாம்.

பாட்டு அல்லது மென்டாவல் தீவுப் பகுதியில் இது உருவாக வாய்ப்பு உள்ளது என்றும் அவர் கூறியுள்ளாா.

மேலும் அவர் இந்திய பெருங்கடல் பகுதியில் சுனாமி எச்சரிக்கை மையம் அமைப்பது மிகவும் அவசியம் என்று குறிப்பிட்டுளளதுடன் ஆசியாவின் பெரும் பகுதிகள் இதனால் பயன பெறும்.

20 நிமிடத்துக்கு முன்னதாக சுனாமி தாக்குதலில் இருநது தப்பித்துக்கொள்ளவும். இதனால் வழி ஏற்படும். கிழக்கு கடற்கரை பகுதிகளில் சென்னை நகரம் ஆபத்து நிறைநத நகரங்களில் ஒன்று என்றும் கூறியுள்ளார். (அ)




## பஸ்சில் பயணம் செய்த 11 பேர் மின்சாரம் தாக்கி பலி

(கடப்பா)

ஆந்திராவில் அரசு பஸ்சில் பயணம செய்து கொண்டிருந்த 11 பேர் மின்சாரம் தாக்கி உயிரிழந்தனா. மேலும் 14 பேர் பலத்த காயமடைந்தனர். இது குறித்து பொலிஸார் தெரிவித்துள்ளதாவது,

ஆந்திராவில் அரசு பஸ் ஒன்று நேற்று முன்தினம் ஜம்மலா மடுகு என்ற இடத்திலிருந்து கடப்பா மாவட்டம் திருமிளரயா பள்ளி நோக்கி சென்று கொண்டிருந்தது.

பஸ்சில் 30 பயணிகள் பயணம் செய்தனர். பஸ் கடப்பா மாவட்டத்தில் புன்னம் பள்ளி என்ற இடத்தை நெருங்கியபோது, வழியில் துண்டிக்கப்பட்டு கீழே கிடந்த உயர்மின் அழுத்தம் கொண்ட வயரை தொடட்து. அப்போது, பஸ்சில் செருப்பு அணியாமல் பயணம் செய்து கொண்டிருந்த சிறுவனை மின்சாரம் தாக்கியது.

உடன் மற்ற பயணிகள் சிறுவனை காப்பாற்ற முயன்றனர். இதில் 11 பேர் மின்சாரம் பாய்ந்து இறந்தனர். பிற பயணிகள் பஸசின் ஜன்னலை உடைத்து வெளியேறினர். 14க்கும் மேற்பட்ட பயணிகள் பலத்த காயமடைந்தனர். இவ்வாறு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் பற்றி அறிந்ததும், ஆழ்ந்த வருத்தமும், அதிர்ச்சியும் தெரிவித்த முதல்வர் ராஜசேகர ரெட்டி இது குறித்த விசாரணை நடத்த உத்தரவிட்டுள்ளார், மின்சாரம் தாக்கி உயரிழந்தவர்களின் குடும்பத்திற்கு அரசுசாலைப் போக்குவரத்து கழகம் ரூ.50 ஆயிரம் நிவாரணம் அறிவித்துளளது. (அ)

## பொலிவியாவில் போராட்டம் அதிபர் கார்லோஸ் இராஜினாமா

தென் அமெரிக்க நாடான பொலிவியாவின் அதிபர் கார்லோஸ் மேஸா தமது பதவியை கடந்த திங்கட்கிழமை இராஜினாமா செய்தார்.

நாட்டின் இயற்கை எரிவாயுத்துறையை அரசுடமை ஆக்கவேண்டும் என்று வற்புறுத்தி, ஆயிரக்கணக்கானோர் அதிபர் மாளிகை முன் ஆர்ப்பாட்டம் நடத்தியதுடன், அவரது மாளிகையையும் நாடாளு மன்றத்தையும் முற்றுகையிட்டனர். ஆனால் அக்கோரிக்கையை ஏற்கமுடியாது என அறிவித்த அதிபர் கார்லோஸ், தனது பதவியை இராஜினாமா செய்வதாக அறிவித்தார்.

ஏழை விவசாயிகள், தொழிலாளர்கள், ஆசிரியர்கள், சுரங்கத் தொழிலாளர்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரும் அந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர். போராட்டம நடத்தியவர்கள், பொலிஸ் தடையையும் மீறி அதிபர் மாளிகையைக் கைப்பற்றுவோம் என்று அச்சுறுத்தினர்.

அதையடுத்து, தனது மாளிகையிலிருந்து தப்பிய அதிபர் கார்லோஸ், வெளிநாட்டுத் தூதரகம் ஒன்றில் தஞ்சம் அடைந்திருப்பதாக வதந்திகள் பரவின. இதற்கிடையே, நாட்டு மக்களுக்கு அவர் திங்கட்கிழமை ஆற்றிய உரையில், தனது ராஜினாமா முடிவை அறிவித்தார்.

தென் அமெரிக்காவில், வெனிசூலா நாட்டுக்கு அடுத்தபடியாக, பெருமளவு இயற்கை வாயு வளத்தைக் கொணட நாடு பொலிவியா. எனவே, பெருமளவில் வருமானம் தரும் எரிவாயுத் துறையை அரசுடைமை ஆகக வேண்டும் என்று மக்கள் போராடிவருகின்றனர். (அ)

## பிலிப்பைன்ஸ்

## பாராளுமன்றத்தில் வெடிகுண்டுப் புரளி உறுப்பினர்கள் வெளியேற்றப்பட்டனர்

(மணிலா)

பிலிப்பைன்ஸ் நாட்டு பாராளுமன்றததில் குண்டு வைக்கப்பட்டு இருக்கிறது. அது வெடிக்கப்போகிறது என்று வந்த மிரட்டலைத தொடர்ந்து பாராளுமன்ற உறுப்பினர்களும், ஊழியர்களும் வெளியேற்றப்பட்டனர்.

பிலிப்பைன்ஸ் நாட்டில் ஜனாதிபதி குளோரியா அரோயோவை கொல்ல சதி நடப்பதாக அந்த நாட்டு இராணுவம் எச்சரித்து இருந்தது.

இந்த நிலையில் ஒரு மர்ம நபர் டெலிபோன் செய்து, பாராளுமன்றத்தில் குண்டு வைக்கப்பட்டிருக்கிறது. அது வெடிக்கப் போகிறது என்று மிரட்டல் விடுத்தார். இதை தொடர்ந்து பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஊழியர்கள் பாராளுமன்றக் கட்டிடத்தில் இருந்து வெளியேற்றப்பட்டனர். கட்டிடமே காலிசெய்யப்பட்டது.

பொலிஸார் வசம் பாராளுமன்ற கட்டிடம் ஒப்படைக்கப்பட்டது. பொலிஸார் மோப்ப நாயோடும், வெடிகுண்டு இருப்பதைக் கண்டறியும் கருவியோடும் கட்டிடததின் ஒவ்வொரு பகுதியிலும் புகுந்து வெடிகுண்டு ஏதும் இருக்கிறதா என்று சோதனை போட்டனர்.

வெடிகுண்டு எதுவும் கிடைக்க வில்லை. வெடிகுண்டு மிரட் டல் பொய்யானது என்பது தெரிய வந்தது. இதைத் தொடர்ந்து பாராளு மன்ற உறுப்பினர்களும், ஊழியர்களும் மீண்டும் பாராளு மன்றக் கட்டிடத்துக்குள் நுழைய அனுமதிக்கப்பட்டனர். (அ)

# மனதை விட்டகலா மாமேதை

யாழ்ப்பாண சமூகத்தின் சாதாரண குடும்பத்தில் பிறந்து யாழ்ப்பாணத்துச் சராசரி மனிதர்களுடன் ஒன்றிணைந்து வாழ்ந்தவர் பேராசிரியர் துரைராஜா. இளமையில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் பாடசாலையில் கல்வி கற்று பின் பருத்தித்துறை காட்லிக் கல்லூரியில் கணிதம் கற்று பல்கலைக் கழகத்திற்கு முதல் மாணவனாகத் தெரிவாகி பொறியியல் விஞ்ஞானப் பட்டம் பெற்று பின் பிரித்தானியாவில் கலாநிதிப்பட்டம் பெற்று பேராதனைப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராய், பேராசிரியராய், பட்டாதிபதியாய் சேவையாற்றி யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் துணைவேந்தராய் பணியாற்றிய எமது பேராசிரியரை நினைவு கூர்வது சாலப் பொருந்தும்.

பேராசிரியர் தாய், தந்தையர்க்கு நல்ல பிள்ளை. சகோதரர்கட்கு நல்ல முன்னோடி. தனது குடும்பத்திற்கு நல்ல தலைவன். தன் பிள்ளைகளுக்கு நல்ல தந்தை. மனைவிக்கு நல்ல கணவன். அவர் குடும்ப வாழ்வு யாழ்ப்பாண கந்தபுராண கலாச்சார வாழ்விற்கு நல்ல உதாரணம்.

பெரியோரை மதித்தல், ஆசிரியரை மதித்தல், சமய வாழ்வில், குடும்ப வாழ்வை ஒன்றிணைதல், தமிழர் கலாசாரத்தில் ஒன்றிப்போதல், கலாசார வாழ்வை தனது பெருமையாகக் கொள்ளல், அடுத்துவரும் சந்ததிக்கு தமிழர் வாழ்வியலின் பெருமைகளை கையளித்தல் போன்றவை அவர் வாழ்வின் இயல்புகளாகும்.

பேராசிரியர் துரைராஜா யாழ்ப்பாண சமூகத்தை வலுவூட்டுவதற்காக அயராது உழைத்தவர்.

தனது பொறியியல் கல்வியை தனது மாணவர்கட்கு விருப்புடன் கற்பித்தவர். தமிழ் சிங்கள, முஸ்லிம் மாணவர்கள் அவரை நல்ல குருவாக, நல்லாசானாக மதித்து வந்தனர்.

பேராசிரியரின் மாணவன் என்று சொல்வதால் தங்களைத் தாங்களே தரமுயர்த்திக் கொண்டவர்கள் பலர். அவர் மாணவர்களின்

**இன்று பேராசிரியர் துரைராஜாவின் 11வது சிரார்த்ததினம்**

பெருமைக்குரியவர் என்பதுடன் நில்லாது மாணவர்களிற்கு பெருமை சேர்த்தவர். எல்லோரையும் அறிவுடையவர்களாகவும் வினைத் திறனுடையவர்களாகவும் உருவாக்க வேண்டும் என்ற அவாவுடன் செயற்பட்டவர். அவரின் கல்விசார் வரலாற்றை அவர் மாணவர்களே உலகெங்கும் பரப்பி நிற்கின்றனர் என்றால் அவர் பெருமையை பறைசாற்ற வேறு யார் வேண்டும்.

தமிழர் தம் வாழ்விடங்களின் அபிவிருத்திக்காக திட்டமிட்டு செயற்பட்டவர். உதாரணமாக பொருளாதாரத்தடையில் அமிழ்ந்து போன யாழ்ப்பாணத்தை மீட்டெடுக்க எல்லா தரத்திலான, எல்லா வகையிலான கல்வியாளர்களையும், தொழில்நுட்பவியலாளர்களையும், தொழிலாளர்களையும், நிர்வாகிகளையும் சிவில் சமூகவியலாளர்களையும் ஒன்றிணைத்து பொருளாதார அபிவிருத்திக்கான எதிர்கால திட்டமிடலை மேற்கொண்டவர்.

யாழ்ப்பாண மக்கள் பொருளாதாரத் தடை காரணமாக இழந்த வசதிகளை மீண்டும் பெற அயராது உழைத்த போது இடர்கால யாழ்ப்பாணத்தவரின் பொருளாதார வாழ்வியலை தனது வாழ்வியலாக மாற்றிக் கொண்டவர். அதனை அக்கால வாழ்வில் வடமராட்சியிலிருந்து சாதனை மனிதர்கள் சைக்கிளில் வந்தபோது தானும் சைக் கிளில் யாழ்ப்பாணம் வந்து துணைவேந்தராகப் பணியாற்றியவர்.

அக்காலத்தில் யாழ்ப்பாணச் சராசரி மனிதர்கள் வாழ்க்கை முறையை தனது குடும்ப வாழ்க்கையை முறையாக மாற்றிக் கொண்டவர். துணைவேந்தர் பதவிக்கான வசதிகளைப் புறந்தள்ளி மக்களில் ஒருவராக தன்னை வரித்துக் கொண்டு வாழ்ந்து காட்டிய பெருமகன்.

தமிழர் நல்ல கல்வியைப் பெறவேண்டும் என்பதற்காக பல்கலைக்கழக கல்வி முறையில் தொழிலாளர் கல்வி, வெளிவாரிக் கற்கைகள் போன்றவற்றை அறிமுகப்படுத்தி யாழ்ப்பாண சமூகத்தை பல்கலைக்கழகம் வரை கொண்டு வந்தவர்.

வடக்குக் கிழக்குத் தமிழர்களில் பெரும்பான்மையோர் விவசாயிகளாகவும் மீன்பிடியாளர்களாகவும் இருப்பதால் விவசாயபீடத்தை கிளிநொச்சியில் நிறுவினார்.

மீன்பிடிக் கற்கைக்கான திட்டங்களைத் தீட்டினார். விவசாய விளைநிலங்கட்கிடையே விவசாயபீடம் இருப்பது போல எதிர்கால அபிவிருத்திக்கு வன்னிப் பெருநிலப்பரப்பே மையமானது, பாதுகாப்பானது என்று கருதி பொறியியல் பீடம் ஒன்றை வன்னியில் நிறுவத் திட்டமிட்டு செயற்பட்டவர்.

இவரின் இம் முயற்சிகள் இடம், காலம்,

**பேராசிரியர் சிவநாதன்**
**தலைவர், பொருளியல்துறை.**

தேவையறிந்து செயற்பட்டவர் என்பதற்கு நல்ல எடுத்துக்காட்டு.

ஒடுக்கப்பட்டவர்களிடத்தும், ஏழைகளிடத்தும், மாணவர்கள், ஆசிரியர்கள், நிர்வாகிகளிடத்தும் அன்பும் ஆதரவும் பரிவும் கருணையும் இருந்ததால் அவர் என்றும் எம் மனதில் விட்டகலா மேதையாகவே உள்ளார். □

---

## இளம் குடும்பஸ்தருக்கு

# எமனான சீட்டு விளையாட்டு

(மட்டக்களப்பு)

சீட்டு விளையாடிக் கொண்டிருக்கையில் பொலிஸாரைக் கண்டு தப்பியோடிய இளம் குடும்பஸ்தர் ஒருவர் ஓட்டமாவடி வாவியில் மூழ்கி மரணமடைந்துள்ளார்.

வாழைச்சேனையைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான முகம்மது பாருக (வயது 30) என்பவரே கடந்த திங்கட்கிழமை இவ்வாறு மரணமடைந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஓட்டமாவடி-வாவிக்கு அண்மையிலுள்ள மறைவிடமொன்றில் ஒரு குழுவினர் சீட்டு விளையாட்டில் ஈடுபட்டுள்ளதாகக் கிடைத்த தகவலைத் தொடர்ந்து வாழைச்சேனைப் பொலிஸார் அந்தப் பிரதேசத்தில் திடீர் சுற்றிவளைப்புத் தேடுதலை மேற்கொண்டனர்.

சீட்டு விளையாட்டில் ஈடுபட்டவர்கள் பொலிஸாரைக் கண்டதும் தப்பித்துக் கொள்வதற்காக அருகில் உள்ள வாவியைக் தாண்டி ஓடும போதே மேற்படி நபர் வாவிச் சேற்றுக்குள் புதையுண்டு மரணமடைந்ததாக வாழைச்சேனைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவத்தினை நேரில் கண்ட சாட்சியங்களின் அடிப்படையில் மரணமடைந்தவரின் சடலத்தைச் சுழியோடிகளின் உதவியுடன் தேடும் நடவடிக்கையில் பொலிஸாரும் உறவினர்களும் ஈடுபட்டனர் எனினும் சடலம் மீட்கப்பட வில்லை எனபொலிஸார் தெரிவித்துள்ளனர். (து-2)

# பொலிஸ் இன்ஸ்பெக்டர்கள் சங்கத்தின் கோரிக்கை

(கொழும்பு)

பொலிஸ் சேவையில் ஒழுங்கு முறையிலான பதவி உயர்வுத் திட்டமொன்றை அமுல் செய்யுமாறு அரசாங்கத்திடம் பொலிஸ் இன்ஸ்பெக்டர்கள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளார்கள்.

பட்டதாரிகளை நேரடியாகப் பொலிஸ் சேவையில் சேர்த்துக் கொள்வதால் ஏற்கனவே பொலிஸ் சேவையில் உள்ள உத்தியோகத்தர்களது பதவி உயர்வுகள் தடுக்கப்படுகின்றன என்று இன்ஸ்பெக்டர்கள் சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

தற்போது சேவையிலுள்ள 6ஆயிரம் பொலிஸ் இன்ஸ்பெக்டர்களில் ஆயிரத்துக்கும் அதிகமானோர் பதவி உயர்வுகளுக்கான தகுதி பெற்றுள்ளார்கள் என்று சுட்டிக்காட்டிய மேற்படி சங்கம் இது தொடர்பாக பிரதமருடன் விசேட பேச்சுவார்த்தைகளை நடத்தப் போவதாகவும் தெரிவித்துள்ளது. (து-9)

# இலங்கை இராணுவத்துக்குப் பாராட்டு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகளின் சமாதான படையின் பணிகளில் இலங்கை இராணுவம் ஆற்றிவரும் பங்களிப்புக் குறித்து அமெரிக்கா பாராட்டுத் தெரிவித்துள்ளது.

இலங்கையில் யுத்தநிறுத்தம் தொடர்ந்தும் இழுபறி நிலையிலுள்ள இந்த காலகட்டத்தில் எகிப்துக்கான சமாதானப் பணிகளில் இலங்கை ஆற்றிவரும் பங்களிப்புக் குறித்து இலங்கையிலுள்ள அமெரிக்க தூதரத்தின் பிரதித்தலைமை அதிகாரி பாராட்டு தெரிவித்தார்.

எகிப்தில் சமாதானப் பணிகளுக்காக உயிரிழந்த இலங்கை இராணுவ வீரர்களின் துணிச்சலுக்கும் உறுதிப்பாட்டிற்கும் தாம் தலைவணங்குவதாக அவர் மேலும் தெரிவித்தார். (து-9)

# வருடாந்த மகோற்சவம்

(மருதங்கேணி)

தென்.புலோலி புற்றளை சித்திவிநாயகர் ஆலயத்தில் வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் 13ஆம் திகதி திங்கட்கிழமை காலை 11 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் திருவிழா இடம்பெறவுள்ளது.

21ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு தேர்த்திருவிழாவும் 22ஆம் திகதி புதன் கிழமை காலை 8 மணிக்கு தீர்த்த உற்சவமும் 13ஆம் திகதி பூங்காவன உற்சவமும் மறுநாள் வெள்ளிக்கிழமை வைரவர் மடையுடனீ திருவிழா இனிது நிறைவுற ஏற்பாடாகியுள்ளது. (அ-35)

# சமுர்த்தி திட்டத்தால் பல்லாயிரக்கணக்கானோர் பயன்

(கொழும்பு)

இலங்கையில்ஏற்பட்டுள்ள இனப்பிரச்சினையைத் தீர்த்து நாட்டிலுள்ள சகல இன மக்களும்நிரந்தர சமாதானத்தோடு வாழ வழி அமைப்பதே ஐக்கிய மக்கள் சுதந்திர முனனணி அரசின் பிரதான நோக்கம். அதற்காகவே ஜனாதிபதி அயராது பாடுபடுகிறார் என வாழக்கைத்திறன், திறன் அபிவிருத்தி, தொழில்நுட்ப பயிற்சி பிரதியமைச்சர் துமிந்த திஸா நாயக்க தெரிவித்தார்.

உள்பத்தைக் கிராமத்தில் வீதி அபிவிருத்திக்கான அடிக்கல் நடும் வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரை நிகழ்த்துகையில கடந்த 1994 ஆம் ஆண்டு பொதுஜன ஐக்கிய முன்னணி அரசால் ஆரம்பிக்கபட்ட சமுர்த்தித் திட்டம் மூலம் பல்லாயிரக் கணக்கான மக்கள் நன்மையடைந்துள்ளதுடன் இந்தத் திட்டம் வெற்றியளித்துளளது இதனுள் பாதை அபிவிருத்தி, குடிநீர், வீடு அமைத்தல் போன்ற திட்டங்களும் அடங்கும்.

மத்திய அரசு மாகாண சபையோடு இணைந்து பலகோடி ரூபா மதிபபுள்ள வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளதுடன், நெடுஞ்சாலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் பல வீதிகளும் செப்பனிடப்பட்டுள்ளன.

நாம்தேர்தல் காலங்களில் பல்வேறு கட்சி, கருத்துக்களை கொண்டிருந்த போதிலும் கிராமங்களில் அபிவிருத்தி பணிகள் நடை பெறுகின்ற போது அரசியல் பேதங்களை மறந்து செயற்படக்கூடியபண்புகள் எம்மத்தியில் வரவேண்டும்.

அரசாங்கத்தால் வழங்கப்படுகின்ற வாக்குறுதிகளுக்கு ஏற்ப சகல வேலைத் திட்டங்களையும் ஒரேயடியாக நிறைவேற்ற முடியாது அவை கட்டம் கட்டமாக நிறைவேற்றப்படும். திறப்பனை பிரதேசசபை எதிர்க்கட்சித்தலைவர் சரத் இலங்கசிங்க, சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் சியான்சிரி, திட்டமிடல்பணிப்பாளர்மெண்டிஸ், சமுர்த்தி முகாமையாளர் ஹிஜ்ரா விவசாயசங்கப் பொதுச்செயலாளர் எம்அத்துற்றதீபஆகியோரும் கலந்துகொண்டனர். (அ-2)

# சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இயல்புநிலை திரும்பும் வரை நிவாரணம்

(கொழும்பு)

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்கையில் இயல்பு நிலை திரும்பும் வரை அவர்களுக்கு தொடர்ந்து 5ஆயிரம் ரூபா கொடுப்பனவை வழங்குவதென நிதியமைச்சு தீர்மானித்துள்ளது.

நேற்று முன்தினம் காலி மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றிய போதே நிதியமைச்சின் செயலாளர் பி.வி.ஜெயசுந்தர அமைச்சின் இத்தீர்மானம் பற்றி தெரிவித்துள்ளார்.

100மீற்றர் எல்லைக்குள் வசித்த போது குடியிருப்புகளை இழந்த மக்கள் வெளிப்பிரதேசத்தில் வீடுகளை அமைக்க முனையும் பட்சத்தில் அவர்களுக்கு அரச வங்கிகள் ஊடாக 2 1/2இலட்சம் ரூபாவை பெற்றுக் கொடுப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது. அரசு சார்ந்த நிறுவனங்கள் தீர்மானிக்கும் வீடுகளுக்கும் இந்தக் கொடுப்பனவு தீர்மானிக்கப்பட்டுள்ளதெனவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நிவாரணத்திட்டத்தை தொடர்ந்து மூன்று ஆண்டுகளுக்கு முன்னெடுத்துச் செல்லவும் திட்டமிடப்பட்டுள்ளதாக நிதியமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-9)

## தென்மராட்சி உயர்பாதுகாப்பு வலய மக்கள்

# மீள் குடியமர்த்தக் கோரி வீதி மறியல் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

இன்று காலை 10.00மணிக்கு இராணுவ அதி உயர் பாதுகாப்பு வலயத்திற்கு உட்பட்ட பகுதிகளான உசன், எழுதுமட்டுவாள் வடக்கு, எழுதுமட்டுவாள் தெற்கு ஒட்டுவெளி, கிளாலி, முகமாலை என அதி உயர் பாதுகாப்பு வலயத்தைச் சேர்ந்த மக்கள் தங்களை மீள் குடியமர்த்தக் கோரி அடையாள வீதி மறியற் போராட்டம் ஒன்றை நடத்தவுள்ளனர்.

இந்த வீதிமறியற் போராட்ட முடிவில் மகஜர்களை உசன் இராணுவ பொறுப்பதிகாரிக்கும அதன் பிரதியை போர் நிறுத்த கண்காணிப்புக்குழுவுக்கும் மற்றும் ஏனைய அமைப்புகளுக்கும் கையளிக்கவுள்ளனர்.

இவ் வீதிமறியற் போராட்டம் பராளுமன்ற உறுப்பினர்கள், இடம்பெயர்தோர் நலன்புரிச் சங்கம், மற்றும் வெகுஜன அமைப்புகளின் ஆதரவுடன் நடைபெறவுள்ளது.

இப்போராட்டத்தில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜும ஏனைய உறுப்பினர்களும் கலந்துகொள்ளவுள்ளனர். (அ-9)

முறைப்படச் சூழ்ந்தும் முடிவிலவே செய்வர்
திறப்பாடு இலாஅ தவர் - குறள்

வலம்புரி

# பொதுக் கட்டமைப்பை ஆதரிக்க ஜே.வி.பி.விதிக்கும் 3 நிபந்தனைகள்

## தவறினால் போராட்டம் வெடிக்குமென ஜே.வி.பி. எச்சரிக்கை

(கொழும்பு)

பொதுக்கட்டமைப்பு ஜனாதிபதி கைச்சாத்திடுவாராயின் மூன்று விடயங்களில் உறுதி மொழியினைப் பெற்றுத்தர வேண டுமென தேசியப் பற்றுள்ள தேசிய இயக்கம் கேட்டுள்ளது.

கொழுமபில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவி யலாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவித்த இயக்கத்தின் இணைத் தலைவர் விமல்வீரவன்ஸ பொதுக்கட்டமைப்பில் கைச்சாத்திட்டால் மீண்டும் ஒரு யுத்தம் ஏற்படாதுஎன்றும், தமிழீழ விடுதலைப்புலிகள் தமது ஆயுதங்களை ஒப்படைப் ப்பார்கள் என்றும், தமிழீழ விடுதலைப்புலிகள் தாம் மேற் கொணடு வரும் படுகொலைகளை நிறுத்துவார்கள் என்றும் ஜனாதிபதியினால் உறுதியளிக்க முடியுமா என அவர் கேள்வி எழுப்பினார்.

இந்த உறுதி மொழியினை ஜனாதிபதி பெற்றுத் தந்தால அவரை நாங்களே பேச்சுமேசையில் கொண்டுபோய் இருத்து வோம். பொதுக்கட்டமைப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்துவரும் நாங்களே, சர்வதேச அளவில் ஆதரவைத் தேடித்தருவோம எனத் தெரிவித்தார்.

இதேவேளை, இக்கோரிக்கைகளுக்கு இணங்காமல் ஜனாதிபதி பொதுக்கட்டமைப்பினை உருவாக்கினால் அதற்கு எதிராக எதிர்வரும் செவ்வாய்க்கிழமை தேசியப்பற்றுள்ள தேசிய இயக்கத்தில் அங்கம் வகிக்கும் சுமார் 42 அமைப்பு களைச் சேர்ந்தவர்கள் கொழும்பில் பாரிய ஆர்ப்பாட்டத்தை நடாத்துவார்கள் எனவும் அவர் எச்சரித்துள்ளார். (து-4)

# பீறிட்டு எழுந்த பௌத்த பீடாதிபதிகள்

சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரணப்பணிகளை மேற்கொள்வதற்கான பொதுக்கட்டமைப்பை கடுமையாக எதிர்ப்பதில் பௌத்த பீடாதிபதிகளும் களத்தில் இறங்கியுள் ளனர்.

விடுதலைப்புலிகளுடன் இணைந்து பொதுக் கட்டமைப்பை உருவாக்குவதில் ஜனாதிபதி இணக் கம் தெரிவித்ததற்கே இத்தனை எதிர்ப்புக்கள் என்றால், இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண்பதால் எத்தனை எதிர்ப்புக்ள் ஏற்படும் என்பதை ஊகித் துக்கொள்ள முடியும். வழமையில் இனப்பிரச்சி னைக்கு தீர்வுகாண்பதில் எதிர்ப்புத்தெரிவிக் கின்ற பௌத்தபீடாதிபதிகள் பொதுக்கட்டமைப்பு விடயத்தில் பீறிட்டு எழுந்துள்ளனர்.

ஒரு பிர்மச்சாரி நூறு குரங்கிற்குச் சமன் என்ற பழமொழியை உறுதிசெய்வது போல பௌத்த பீடங்களின் நான்கு மகாநாயக்கர்களும் பொதுக் கட்டமைப்பு விடயத்தில் நானூறுகுரங்கிற்குச் சமனாக தொங்கிப்பாய்கின்றனர்.

பொதுக்கட்டமைபபை உருவாக்கினால் அங்கு ஆணைபிறப்பிக்கவேண்டிவரும் என்பது மகா நாயக்கர்களின் எச்சரிக்கையாகும். சங்க ஆணைபிறப்பித்தால் பௌத்தமதத்தில் இருக் கின்ற ஒருவர் எந்தவிதநடவடிக்கையிலும் ஈடுபட முடியாது என்பது பௌத்தபீடத்தின் கட்டளை அவ்வாறு சங்க ஆணை பிறப்பிக்கப்பட்ட ஒருவர் ஏதேனும் நடவ்டிக்கைகளைச் செய்வது என் றால் பௌததமதத்தில் இருந்து வெளியேறியே அத னைச்செய்ய முடியும்.

ஆக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பொதுக்ககட்டமைப்பை ஏற்படுத்த உடன்படு கின்றபோது நான்கு மகாநாயக்கர்களும் ஜனா திபதிக்கு எதிராக சங்க ஆணையை பிறப்பிப்பார் கள்.

சங்க ஆணை பிறப்பிக்கப்பட்டால் ஜனாதிபதி பொதுக்கட்டமைப்பில் கைச்சாத்திட முடியாது போகும். அதனையும் மீறி அவர்பொதுக்கட்டமைப் பில் கைச்சாத்திடுவதாக இருந்தால் பௌத்த மதத்தை துறக்கவேண்டும்.

இப்போது ஜனாதிபதிக்கு இருக்கக்கூடிய பிரச் சினை பொதுக்கட்டமைப்பை கைவிடுவதா? அல் லது பௌத்தமதததை துறப்பதா? இந்த இரண்டு விடயங்களுக்கு தீர்வுகாண்பதிலேயே அவரின் ஆட்சித்திறமை தங்கியுள்ளது.

பௌத்தமதத்தை துறப்பதற்கு ஜனாதிபதி உடன்படாதுவிட்டால் சுனாமியால் பாதிக்கப்பட்ட ஆயிரக்கணக்கானவர்களுக்கு. பணிசெய்து அவர் களுக்கு வாழ்வு கொடுத்த பயனைப்பெற முடி யாது போகும்.

மாறாக பௌத்தம்தம் எனக்கு பெரிதல்ல ஜனாதிபதிக்கு இருக்கக்கூடிய அதிகாரங்களை பௌத்தபீட மகாநாயக்கர்களால் கட்டுப்படுத்த முடியாது. சங்கஆணைபிறப்பித்தால் என்னால் எதுவும் செய்யமுடியாது போகும் என நான் தேர் தல்பிரசாரத்தின்போது மக்களுக்கு தெரியப்படுத் தவில்லை. எனவே சங்கஆணைபற்றி நான் கவலைப்பட மாட்டேன் என ஜனாதிபதி கூறு வரான்னால் சுனாமியினால் பாதிக்கப்பட்ட ஏழை மக்கள் வாழ்வுபெறுவர்.

அது மட்டுமல்ல, இந்த நாட்டில் சும்மாயிருந்து போதனைசெய்து நாட்டை குழப்பும் பௌத்த பிக்குகளின் கொட்டம் அடக்கப்படும். அத னைசெய்த பெருமை ஜனாதிபதி சந்திரிகா கும்மார துங்காவையே சாரும்.

மேற்கூறப்பட்ட இரண்டு விடயங்களில் ஜனா திபதி எந்த முடிவை எடுக்கின்றார் என்பதை பொறுத்தே சண்டையா? சமாதானமா? என்ற முடிபு தெரியவரும்.

## யாழ்.சமூக முன்னேற்ற நிலையம் நடவடிக்கை

# இடைவிலகிய 50 மாணவர்கள் பாடசாலையில் இணைக்கப்பட்டனர்

யாழ்.சமூக முன்னேற்ற நிலையத்தினரால் யாழ்.கரை யோரப் பாடசாலைகளில் கல்விகற்று வறுமை காரணமாக படிப்பை இடைநிறுத்திய 50 மாணவர்கள் மீளவும் கல்வி கற்ற பாடசாலைகளில் இணைக்கப்பட்டுள்ளனர்.

பாசையூர், குருநகர், நாவாந்துறை, காக்கைதீவு, கொழும் புத்துறை ஆகிய கரையோரப்பிரதேசங்களைச்சேர்ந்த நூற் றுக்கும் மேற்பட்ட மாணவர்கள் இந்த வருட ஆரம்பத்தி லிருந்து வைகாசி மாதம்வரை பாடசாலைகளிலிருந்து இடை விலகியுள்ளனர் என அந்த நிலையத்தினால் நடாத்தப்பட்ட ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

இவ்வாறு பாடசாலைகளிலிருந்து இடைவிலகியவர்களில் எட்டு வயதிற்கும் பதினைந்து வயதிற்கும் இடைப்பட்ட இரு பாலாரும் உள்ளடங்கி உள்ளனர். குடும்ப வறுமை காரண மாகவும் வீடுகளில் கல்வி கற்பதற்கு ஏற்ற சூழ்நிலை இல் லாமையினாலுமே இவர்கள் தமது பாடசாலை வாழ்க்கையை இடைவிலகியுள்ளனர்.

இவர்களில், முதற் கட்டமாக, 50 மாணவர்கள் சமூக முன் னேற்ற நிலையத்தினால் மீளவும் அவர்கள் கல்வி கற்ற பாட சாலைகளில் இணைக்கப்பட்டுள்ளதுடன் இவர்களுக்குத் தேவை யான பாடசாலை உபகரணங்களும், பாடசாலைப் புத்தகப்பையும் எமது நிறுவனத்தினால் அன்பளிப்புச்செய்யப்பட்டுளளன.

பாடசாலைகளிலிருந்து விலகிய ஏனைய மாணவர்களை யும் பாடசாலைகளில் மீள இணைப்பதற்கு சமூக முன்னேற்ற நிலையம் நடவடிக்கை எடுத்துள்ளது. குடும்ப வறுமை காரண மாக பாடசாலைகளிலிருந்து இடைவிலகி தற்போது மீள வும் பாடசாலைகளில் இணைந்து கல்வி கற்க ஆர்வம் உள்ள யாழ்.குடாநாட்டின் ஏனைய பிரதேசங்களைச் சேர்ந்த மாண வர்களோ அல்லது அவர்களின் பெற்றோர்களோ யாழ்.பழைய பூங்கா வீதியில் அமைந்துள்ள யாழ்.சமூக முன்னேற்ற நிலை யத்துடன் தொடர்புகொள்ளுமாறு யாழ்.சமூக முன்னேற்ற நிலை செயலாளர் கேட்டுக்கொண்டுள்ளார். (அ-19)

# சி.பி.கணனி கல்வி நிறுவனம் திறப்புவிழா

சி.பி. கணனி கல்வி நிறுவகம் நாளை காலை 9.30 மணிக்கு கோண்டாவில், புகையிரத வீதியிலுள்ள சி.பி.கணனி க்ல்வி நிறுவகத்தில் திறந்துவைக்கப்படவுள்ளது. கூட்ட நிகழ்வு கள் கோண்டாவில் இந்துமகாவித்தியாலய கூட்ட மண்டபத் தில் நடைபெறவுள்ளன.

ஸ்ரீலஸ்ரீ சோமாஸ்கந்த தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் ஆசியுரையையும், யாழ்.பல்கலைக்கழக உப வேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் வாழ்த்துச் செய்திபி னையும் வழங்கவுள்ளனர்.

இவ்விழாவில் பிரதம விருந்தினர்களாக பாராளுமன்ற உறுப்பினர் மாவை சோ.சேனாதிராசா, யாழ்.மாவட்ட அரசி யல்துறைப்பொறுப்பாளர் சி.இளம்பரிதி, உயர்தொழிநுட்ப நிறுவகப் பணிப்பாளர் ரி.இராஜரட்ணம், யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ வணிகத்துறைப் பீடாதிபதி க.தேவராஜா, யாழ். கொக்குவில் இந்துக்கலலூரி அதிபர் பொ.கமலநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

சிறப்பு விருந்தினர்களாக முன்னாள் பாராளுமன்ற உறுப் பினர் சி.சிவமகாராசா, சர்வதேச தமிழீழ மாணவர் பேரவைத் தலைவர் வ.கண்ணன், முன்னாள் கல்விப் பணிப்பாளர் கே. சி.வேலாயுதம், யாழ்.கொக்குவில் இந்துக்கல்லூரி உப அதிபர் ஏஸ்.வி.மகேந்திரன், யாழ்.கோண்டாவில் இந்துமகா வித்தியாலய முன்னாள் அதிபர் செல்வி பா.மார்க்கண்டு, சுன்னாகம் தேசிய சேமிப்புவங்கி முகாமையாளர் வி.அரு ளானந்தம், எஸ்.ரி.பி.கணனி நிறுவக முகாமைப் பணிப்பாளர் எஸ்.சிவலிங்கம், சமூக முன்னேற்றக் கழகங்களின் சமா சத் தலைவர் க.மயில்வாகனம் ஆகியோர் கலந்துகொள்ள வுள்ளனர்.

மேலும் கணனிக் கல்வியின் முக்கியத்துவமும் சி.பி. கணனிக் கல்வி நிறுவகத்தின் சேவையும் என்னும் பொரு ளில் உயர்தொழில்நுட்ப நிறுவன விரிவுரையாளர் வ.சிவ குமார் கருத்துரை வழங்கவுள்ளார். (அ-2)

# வெளிநாட்டு வேலை ஆண்களுக்கு அதிக வாய்ப்பு

சமூகப் பிரச்சினைகளைக் கட்டுப்படுத்துவதற்காக வெளி நாட்டு தொழில் வாய்ப்புக்களுக்கான பயிற்சி பெற்ற ஆண்களை அனுப்ப வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் கவனம் செலுத்தி வருகின்றது.

பெண்கள் வெளிநாட்டு வேலை வாய்ப்புக்களுக்கு செல் வதால் குடும்பப் பிரச்சினைகள் உட்பட சமூகச் சிக்கல்கள் தோன்றும் வீதம அதிகரித்துள்ளதாக அதன் உயர் அதி காரி தெரிவித்தார்.

அதேபோன்று வெளிநாட்டு வேலைவ்ாய்ப்புக்களுக்காக முன்னர் ஆண்களுக்குக் காணப்பட்ட கேள்வியைவிட தற் போதைய கேள்வி அதிகரித்துள்ளதாக வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் மேற்கொண்ட ஆய்வுகளிலிருந்து தெரி யவந்துள்ளது.

இதற்கு முன்னர் ஆண் ஊழியர்களுக்குக் காணப்பட்ட 25வீத கேள்வி தற்போது 35 வீதமாக அதிகரித்துள்ளதாக அவர்குறிப்பிட்டார். (அ-9)

# சத்தியசாயி பாபா பற்றிய வில்லிசை நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

தமிழ் நாட்டிலிருந்து வருகைதந்துள்ள, தமிழ்நாடு அரசி யல் கலைமாமணிப் பட்டம்வழங்கிக் கௌரவிக்கப்பட்ட கவிஞர் சுப்பு ஆறுமுகமும் அவரது குழுவினரான பேராசிரியர் திருமகள், திருமதி பாரதி திருமகள், காந்தி, பகவராஜ் வெங் கட கணேஷ்ராவும் இணைந்து வழங்கும் பகவான்ஸ்ரீ சத்திய சாயி பாபாவின் வாழ்வும் அற்புதமும் வில்லிசை நிகழ்ச்சி எதிாவரும் 14ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 5 மணிக்கு நல்லூா சட்டநா்தா் வீதி இளங்கலைஞா் மன்றத்திலும் 15ஆம் திகதி புதன்கிழமை மாலை 5 மணிக்கு பருத்தித்துறை சிவன கோவில் மண்டபத்திலும் நடைபெறும். (து)

# பொதுக்கட்டமைப்புக்கு சட்ட முக்கியத்துவம் தேவையற்றது

பொதுக்கட்டமைப்பு உருவாக்குவதற்காக அரசியல் யாப்பு திருத்தமோ, சட்டதிருத்தங்களோ, விசேட சட்டமோ எதுவும் தேவைஇல்லை என்று அரசியல் யாப்பு விவகார அமைச்சர் டி.யூ.குணசேகர தெரிவித்துள்ளார்.

ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

பொதுக்கட்டமைப்பு என்பது ஒரு நிர்வாக அலகு. அது அதிகாரிகள் அளவில் நடைமுறைபபடுத்தப்படவுள்ளது. இதில் வடக்கு-கிழக்கில் பாதிக்கப்பட்ட பகுதிகளும் இணைக்கப் பட்டுள்ளன. இந்த பொதுக்கட்டமைப்பு ஒரு குறிப்பிட்ட காலம் வரைதான் செயல்படும். ஒரு பாராளுமன்ற உறுப்பினரின் கையெழுத்துடன்கூட இந்த பொதுக்கட்டமைப்பைச் செயல் படுத்தலாம். எனவும், வடக்கு-கிழக்கு மக்களுக்கு உதவி செய யக்கூடிய பொதுக்கட்டமைப்பை நிராகரிப்பதன் மூலம் பிரி வினைவாதம்தான் வலிமையடையும் என்பதை வரலாறுகள் நிரூபித்து இருக்கின்றன என்றும் அவர் தெரிவித்தார். (து-4)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

எப்போதும் "நானே அவன்" என்ற எண் ணம் மட்டும் விலக வேண்டாம். இந்த சொற் கள் உங்கள் நெஞ்சில் உள்ள குப்பைகளை எல்லாம எரித்துவிடும். உங்களுக்குள் அடஙகிக்கிடக்கும் சக்தியை இவை எழுப் பிவிடும்.

சுவாமி விவேகானந்தர்

# மகாநாயக்கர்களின் அனுமதியுடனேயே பொதுக் கட்டமைப்பு உருவாக்கப்படும்

## ஜனாதிபதி

மகாநாயக்கர்களின் எவ்வித அனுமதியுமின்றி பொதுக் கட்டமைப்பு கைச்சாத்திடப்படமாட்டாதென ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளுடன் பொதுக் கட்டமைப்புப் போன்ற எந்தவொரு உடன்பாட்டையும் ஏற்படுத்திக்கொள்ளவேண்டாமென நான்கு பௌத்த பீடாதிபதிகள் ஜனாதிபதிக்கு அனுப்பிய கடிதத்திற்கு பதில் அளித்து இருக்கும் ஜனாதிபதி, மகாநாயக்கர்களின் அனுமதியின்றி எந்தவித கட்டமைப்பும் கைச்சாத்திடப்படமாட்டாதென உறுதியளித்துள்ளார்.

ஜனாதிபதியின் பதில் கடிதத்தினை அமைச்சர் போகொல்லாகமையும், பாராளுமன்ற உறுப்பினர் விஜயதாச ராஜபக்ஷவும் நேற்று மகாநாயக்கரிடம் கையளித்தனர்.

நான்கு பௌத்த பீடங்களைச் சேர்ந்த மகாநாயக்க தேரர்கள் நேற்று மாலை விசேட ஹெலிகொப்டர் மூலம் ஜனாதிபதி மாளிகைக்கு வரவழைக்கப்பட்டு,அங்கு அவர்களுக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் பேச்சு இடம்பெற்றது.

நேற்று முன்தினம் இவர்கள் உத்தேசப் பொதுக் கட்டமைப்புத் தொடர்பாக ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்திற்கான பதிலை நேற்று அதிகாலை ஜனாதிபதி, அமைச்சர் ரோகித போகொல்லாகம உட்பட 3 பாராளுமன்ற உறுப்பினர்கள் மூலம் அனுப்பி வைத்தார். (ச)


## நூல் வெளியீட்டு விழா அழைப்பு

கவிஞர் "சூரியநிலா" அவர்களின் (ஆ.ஜென்சன் றொனால்ட்)

### சூரியக் குளியல்

(கவிதை நூல்)

நூல் வெளியீட்டு விழா இன்று (11.06.2005) சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். பிரதான வீதி மறைக்கல்வி நடுநிலையத்தில் நடைபெறும்

அன்பர்கள், நண்பர்கள் கலை ஆர்வலர்கள் அனைவரையும் இந் நூல் வெளியீட்டு விழாவில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்சன் கலையகம்
உசன், மிருசுவில்

T.P: 0776160302 (9595)


# அரசைவிட்டு ஜே.வி.பி...

மைப்பில் கைச்சாத்திடுவதனால் எந்தப் பிரதிபலன் கிட்டினாலும், அதில் கைச்சாத்திடுவதாகவும் அதன்பின்னர் ஓய்வுபெறவும் தயாராக இருப்பதாகவும் ஜனாதிபதி கூறினார்.

விடுதலைப்புலிகளுடன் அதிகாரத்தை பகிர்ந்துகொள்வது தொடர்பில் ஆகக்குறைந்த மட்டத்திலான ஒரு திட்டமே இதுஎன குறிப்பிட்ட ஜனாதிபதி இதில் இன்னும் திருத்தங்களை மேற்கொண்டு இதனைவிட குறைவான ஒருமட்டத்திற்கு அதனை கொண்டு செல்லமுடியாது என்றும், அதனால் என்ன வகையான பிரதிபலன் கிட்டினாலும் பரவாயில்லை. இதில் கைச்சாத்திட தான் முடிவு செய்திருப்பதாகவும் கூறினார்.

சுனாமி நிவாரண சபையின் பிரதேச குழுக்களில் விடுதலைப் புலிகளின் பிரதி நிதித்துவத்திற்கு சமனான பிரதிநிதித்துவமும் முஸ்லிம்களுக்கு வழங்கப்படவேண்டும் என்றும் உத்தேச உடன்படிக்கையில் ஒரு முஸ்லிம் பிரதிநிதியும் கைச்சாத்திட வேண்டும் என்றும், வேண்டுகோள் விடுத்த ஆளும்கட்சியின் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர் இதற்கு இணங்கினால்தான் தங்களால் இக்கட்டமைப்பிற்கு ஆதரவு வழங்கமுடியும் எனத்தெரித்துள்ளார்.

இந்த விடயம் சம்பந்தமான விடுதலைப் புலிகளுடன் ஆராய எதிர்பார்த்திருப்பதாக தெரிவித்த ஜனாதிபதி,

சுனாமி நிவாரண சபை உடன்படிக்கையில் அரசியலவாதிகள் எவரும் கைச்சாத்திட மாட்டார்கள் என்றும் தனக்குகீழ் இருக்கும் செயலாளர் ஒருவரே இந்த உடன்படிக்கையில் கைச்சாத்திடுவார் எனவும் கூறியுள்ளார். (ச)

# பாதுகாப்பு ஒப்பந்தம்...

இவ்வொப்பந்தத்தின் மூலம் பிராந்தியத்தின் பாதுகாப்பு பலப்படுத்தப்படும். தமிழீழ விடுதலைப் புலிகளின் விமானப்படை மற்றும் கடற்படை ஆகியவற்றின் பலம் வெகுவாக குறைவடையும் எனத் தெரிவித்தார்.

அத்துடன் இருநாடுகளுக்கும் இடையிலான பாதுகாப்பு தகவல்கள் பரிமாற்றம், இராணுவப்பயிற்சி போன்றவற்றை மேம்படுத்துவதுடன், இராணுவப்பலத்தினை விருத்தி செய்தலும் உள்ளடக்கபட்டுள்ளதாகவும், அத்துடன் இலங்கையின் 450 பொலிஸாருக்கான பயிற்சிவழங்கும் நடவடிக்கை ஒன்றினை இந்தியா விரைவில் ஆரம்பிக்கவுள்ளதாக தெரிவித்தார்.

சுனாமி கடல்சீற்றம் காரணமாக பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு மாகாணங்களை கட்டியெழுப்பும்நோக்கில் இலங்கை அரசும் தமிழீழ விடுதலைப்புலிகளும் பொதுக் கட்டமைப்பினை உருவாக்க ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எடுக்கும் முயற்சி அதிகாரபூர்வமானது.

எனினும் பொதுக்கட்டமைப்பு என்பது இலங்கையின் உள்நாட்டு விடயமாகும். இலங்கை இனப் பிரச்சினைக்கு அரசியல் வழியிலேயே தீர்வுகாணவேண்டும். அதற்கு சமாதானப்பேச்சுக்களை ஆரம்பிப்பதே சிறந்தவழி என தெரிவித்தார்.

எவ்வாறெனினும் இவ்விடம் தொடர்பில் ஜனாதிபதி சந்திரிகா எடுக்கும் முயற்சிக்கு இந்தியா தனது பூரண ஆதரவினை அளிக்கும் என அவர் உறுதியளித்தார். (ச-4)

# பொதுக்கட்டமைப்பை வாபஸ்...

தலைவர்கள் பொதுக்கட்டமைப்பில் ஜனாதிபதி கைச்சாத்திட்டால் அரசிலிருந்து விலகி மக்களுக்கு உண்மையை எடுத்துரைப்போம் என்று கூறியதாகத் தெரியவருகிறது.

ஜனாதிபதியுடன் பேசி கூட்டமைப்பு அரசுக்குள் பிரச்சினை எழாதவாறு முரண்பாட்டுக்குத் தீர்வு காண முயற்சிப்பதாகவும், அதுவரை பொறுமைகாக்குமாறும் பிரதமர் ஜே.வி.பியினருக்கு உறுதி அளித்துள்ளார்.

எனினும் ஜே.வி.பி. நேற்றுக் காலக்கெடு விதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# பொதுக் கட்டமைப்பை எதிர்த்து....

டைநோக்கி சென்று அங்கு பொதுக் கட்டமைப்பிற்கு எதிர்ப்புத் தெரிவித்து கூட்டம் ஒன்றையும் நடாத்தியிருந்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டோர் பொதுக்கட்டமைப்பிற்கு எதிர்ப்புத்தெரிவித்து கோஷங்களை எழுப்பினர். சுமார் 200க்கும் மேற்பட்ட ஜாதிகஹெல உறுமயவைச் சேர்ந்த பௌத்த மதகுருமார்களும், தொண்டர்களும் கொழும்பு விகாரமாதேவி பூங்காவில் இருந்து குஞ்சுப்பொரளைப் பகுதியில் இருந்தும் ஆர்ப்பாட்ட ஊர்வலங்களை ஜனாதிபதி மாளிகை வாசல்வரை நோக்கிச் சென்றனர்.

ஜனாதிபதியின் செயலாளர் இப் பொதுக்கட்டமைப்பு விடயத்தினை முற்றாக கைவிட்டு விட்டார் என அறிக்கவேண்டும் என அவர்கள் அங்கு கோரிக்கை விடுத்தனர்.

இதன் பின்னர் அங்கு சில பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றன. பின்னர் ஆர்ப்பாட்டக்காரர்கள் பாதுகாப்புத் தடைகளையும் தாண்டி ஜனாதிபதி மாளிகை நோக்கி முன்னேறமுயன்ற சமயம் பொலிஸாரும் ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவினரும் அவர்களை அங்கு தடுத்து நிறுத்தினர்.

இதனால் கோபமடைந்த சில பௌத்த பிக்குகள் மண்ணெண்ணெய் ஊற்றி அங்கேயே தீக்குளிக்கப்போவதாக எச்சரித்தனர். நிலைமை இவ்வாறு கட்டுக்கடங்காது போகவே அவர்கள் மீது தண்ணீர்ப்பிரயோகமும், கண்ணீர்க் குண்டுப் பிரயோகமும் நடத்தப்பட்டது.

முதலில் கலைந்துசென்ற ஆர்ப்பாட்டக்காரர்கள் மீண்டும் ஜனாதிபதி மாளிகை நோக்கி முன்னேற முயன்ற சமயம் பொலிஸார் அவர்கள் மீது கண்ணீர்ப் புகைக்குண்டுப் பிரயோகத்தையும், குண்டாந்தடிப் பிரயோகத்தையும் மேற்கொண்டனர்.

இதற்குப்பின்னர் கலைந்து சென்ற ஆர்ப்பாட்டக்காரர்கள் லீற்றென்கோப்பல் லேக்கவுஸ் சுற்றுவட்டத்தில் மீண்டும் கூட முயற்சித்த சமயம் அவர்கள் மீதும் பொலிஸார் கண்ணீர்ப்புகைக் குண்டுவீசி அவர்களை அங்கிருந்து கலையச்செய்தனர்.

கொழும்பு சுற்று வட்டத்தை அண்டிய பிரதேசத்தில் போக்குவரத்து நெருக்கடி ஏற்பட்டது. அத்துடன் நேற்று மாலை நடைபெற்ற சம்பவங்களின்,போது இரண்டு பௌத்தகுருமார்கள் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ச-8.4)

# சோபித தேரரை...

உங்களது உடல்நிலை மோசமாக இருப்பதால் மருத்துவ பரிசோதனைக்காக உங்களைக் கொழும்புக்குக் கொண்டுசெல்வது எங்கள் கடமையென்று கூறியுள்ளனர்.

ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவினரே சிவில் உடையில் வந்து தன்னைக் கடத்தத் திட்டமிடுகின்றனர் என்று அறிந்துகொண்ட தேரர் உடனே கூக்குரலிட்டு ஏனைய பிக்குகளை அழைத்தார் என ஹெல உறுமயக் கட்சி கூறியுள்ளது.

தேரரின் சத்தத்தைக் கேட்டு அங்கு திரண்ட சுமார் 200 இற்கும் மேற்பட்ட பிக்குகள் தேரர் கடத்தல் முயற்சியை முறியடித்துள்ளனர்.

இதன் பின்னர் அங்கு கூடிய நூற்றுக்கணக்கான பிக்குகள் தேரரின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு அனைத்து ஏற்பாடுகளையும் மேற்கொள்வதாக உறுதிபூண்டுள்ளனர். (ச)


## திறப்புவிழா அழைப்பு

### C.B. கணனி கல்வி நிறுவகம்

காலம்

2005.06.12 ஞாயிற்றுக்கிழமை பகல் 9.30 மணி

திறப்புவிழா நிகழ்விடம்

C.B. கணனி கல்வி நிறுவகம்
(புகையிரத வீதி, கோண்டாவில்)

கூட்ட நிகழ்விடம்

கூட்ட மண்டபம்
(இந்து மகா வித்தியாலயம், கோண்டாவில்)

**ஆசியுரை:**

ஸ்ரீலஸ்ரீ சோமாஸ்கந்த தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரியசுவாமிகள்

**வாழ்த்துச் செய்தி:**

பேராசிரியர் சு.மோகனதாஸ் (உபவேந்தர், யாழ்.பல்கலைக்கழகம்)

**பிரதம விருந்தினர்கள்:**

உயர்திரு சி.இளம்பரிதி (அரசியல்துறைப் பொறுப்பாளர், யாழ்.மாவட்டம்)
மாவை சோ.சேனாதிராஜா (பாராளுமன்ற உறுப்பினர்)
உயர்திரு ரி.இராஜரட்ணம் (பணிப்பாளர், உயர் தொழில்நுட்ப நிறுவகம்)
உயர்திரு க.தேவராஜா (பீடாதிபதி , வணிக முகாமைத்துவத்துறை, யாழ்.பல்கலைக் கழகம்)
உயர்திரு பொ.கமலநாதன் (அதிபர், கொக்குவில் இந்துக் கல்லூரி)

**சிறப்பு விருந்தினர்கள்:**

உயர்திரு சி.சிவமகாராசா (முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்)
உயர்திரு ந.கண்ணன் (தலைவர், சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை)
உயர்திரு கோசி.வேலாயுதம் (முன்னாள் கல்விப் பணிப்பாளர்)
உயர்திரு S.V.மகேந்திரன் (உப அதிபர், யாழ்.கொக்குவில் இந்துக் கல்லூரி)
செல்வி பா.மார்க்கண்டு ( முன்னாள் அதிபர். யாழ்.கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம்)
உயர்திரு V.அருளானந்தம் (முகாமையாளர், தேசிய சேமிப்பு வங்கி, சுன்னாகம்)
உயர்திரு S.சிவலிங்கம் (முகாமைப் பணிப்பாளர், STP கணனி நிறுவகம்)
உயர்திரு க.மயில்வாகனம் (தலைவர், சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசம்)

இவ்வண்ணம் தங்கள் நல்வரவை நாடிநிற்கும்

C.B. கணனி கல்வி நிறுவகம்
புகையிரத வீதி, கோண்டாவில்
T.P: 021 4590291

K.R.சுகுமார்
(பணிப்பாளர்)

## விற்பனையாளர்கள் தேவை

எமது புத்தகசாலையில் விற்பனையாளராகப் பணிபுரிவதற்கு ஆண்கள் தேவைப்படுகின்றனர். ஆர்வமுள்ளோர் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்.

ஸ்ரீலங்கா புத்தகசாலை
234, கே.கே.எஸ். வீதி.
யாழ்ப்பாணம்
T.P: 021 222 2537

## திருமணக்கார் [குளிரூட்டியது] வாடகைக்கு

★ திருமண வைபவங்கள் (அலங்காரத்துடன்)
★ விசேட வைபவங்கள்
★ சுற்றுலாக்கள்

போன்ற அனைத்துச் சேவைகளுக்கும் புத்தம் புதிய (ஆங்கில இலக்கம் கொண்ட) குளிரூட்டிய நவீனகார், சாரதியுடன் நியாயமான செலவில் உயர்ந்த சேவையுடன் வாடகைக்கு கிடைக்கும்.



தொடர்பு: ரட்ணம்
சோமசுந்தரம் பாலர் பாடசாலை 22, சோமசுந்தரம் அவனியூ
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்
T.P: 0777-903090, 077-3086939, 0777-246117, 077-6018467

## நாதன்ஸ் சினிமா

குளிரூட்டப்பட்டது (யாழ்ப்பாணம்)

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடாக (4 வது இறுதி வாரம்)

அறிந்தும் அறியாமலும்



கா.நே: 10.30,2.30,6.30,9.30(பு.நே)

13.06.2005 திங்கள் முதல் (நாளை மறுநாள்)

THE DAY AFTER TOMORROW (தமிழாக்கம்)

சுனாமி போன்ற அழிவுகளை விபரிக்கும் சித்திரம்

## மனோகரா யாழ்.

08.06.2005 முதல்

ஸ்ரீகாந், கோபிகா, விவேக் நடித்த

புதிய வெளியீடு




கா.நேரம்: 9.30, 2.30, 6.30, 9.30

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு

## நிறைஞ்சனாஸ்

சங்கானை

அர்ஜுன், ரீமாசென், பிரகாஸ்ராஜ், வடிவேல் நடித்த




கா.நே: 11.00, 2.45, 6.


... யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.06.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.